பிரம்மஞான சபையின் நோக்கங்களை பரப்புவதற்காக அன்னிபெசன்ட் அவர்கள் நியூ இந்தியா (New India) என்ற செய்தித்தாளை நடத்தி வந்தார். இச்சபையின் தலைமையிடத்தை சென்னையில் அடையார் என்னும் இடத்தில் நிறுவினார். அடையாறில் ஒரு நூலகத்தை நிறுவி பழமையான சமஸ்கிருத நூல்களைப் பாதுகாத்து வந்தார். இச்சபை இந்தியர்களின் மறுமலர்ச்சிக்காக ஓர் முன்னோடி இயக்கமாகச் செயல்பட்டது.

## இராமகிருஷ்ண இயக்கம் – 1897

இராமகிருஷ்ண இயக்கம், இராமகிருஷ்ண பரமஹம்சரின் பெயரால் ஏற்படுத்தப் பட்டது. இது ஒரு தன்னார்வத்தொண்டு நிறுவனம். சுவாமி விவேகானந்தர் என்பவரால் 1897 ஆம் ஆண்டு மே 1 ஆம் நாள் துவங்கப்பட்டது. இராமகிருஷ்ணரின் முக்கிய சீடர்களில் விவேகானந்தரும் ஒருவராவர். இராமகிருஷ்ணரின் போதனைகளை உலகம் முழுவதும் பரப்பினார். இராமகிருஷ்ண மடம் 1897 ஆம் ஆண்டு கொல்கத்தாவிற்கு அருகில் உள்ள பேலூரில் சுவாமி விவேகானந்தரால் நிறுவப்பட்டது. இராமகிருஷ்ண மடத்தின் கிளைகள் இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலும் நிறுவப்பட்டன. உடல்நலம், பேரழிவு நிவாரணம், கிராம முன்னேற்றம், ஆதிவாசிகள் நலன் மற்றும் துவக்கக் கல்வி மற்றும் உயர் கல்வி , கலாச்சார முன்னேற்றம் போன்றவற்றிற்காக பெரும் தொண்டாற்றி வருகிறது.

இராமகிருஷ்ண பரமஹம்சர் வங்காளத்தில் ஓர் பிராமணக் குடும்பத்தில் 1836 ஆம் ஆண்டு பிறந்தார். இவரது துணைவியார் பெயர் சாரதாமணிதேவி. இவர் தட்சிணேசுவரம் என்னும் இடத்தில் உள்ள காளி கோயிலில் அர்ச்சகராகப் பணியாற்றினார். அனைத்துச் சமயங்களின் அடிப்படை உண்மைகளிலும் அவருக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருந்தது. பல வடிவங்களில் இருந்தாலும் கடவுள் ஒருவரே என்ற தீர்க்கமான கொள்கையைக் கொண்டிருந்தார். மனிதனுக்கு செய்யும் பணி கடவுளுக்குச் செய்யும் பணியாகக் கருதப்படும் என்று உறுதியாக நம்பினார். இவர் 1886 ஆம் ஆண்டு இறந்தார்.



இராமகிருஷ்ண பரமஹம்சர்

இராமகிருஷ்ணரின் மறைவுக்குப்பின் அவரது முக்கிய சீடரான விவேகானந்தர் என அழைக்கப்பட்ட நரேந்திரநாத் தத்தா, இராமகிருஷ்ணரின் கொள்கைகளை உலகம் முழுவதும் பரப்பினார். 1893 ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சமய மாநாட்டில் கலந்துகொண்டு 'என் சகோதர, சகோதரிகளே' என தனது முதல் உரையின் மூலம், இந்தியப் பண்பாட்டின் சிறப்பையும் இந்து சமயத்தின் மேன்மையையும் உலகறியச் செய்தார்.

இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்கள் மற்றும் கருத்துக்கள் அனைத்தும், சமயம் மற்றும் மனிதாபிமானம் அடிப்படையில் அமைந்தன. இவ்வியக்கம் அரசியல் நோக்கம் கொண்டது அல்ல. விவேகானந்தர் 'துறத்தல் மற்றும் சேவை' இரண்டுமே நவீன இந்தியாவின் இரு கொள்கைகளாக இருக்கவேண்டும் எனக் கூறி, அதன் அடிப்படையிலேயே உழைத்தார். 'ஜீவாவே (உயிர்) சிவா' என்ற

நம்பிக்கையின் அடிப்படையில் 'மக்கள் பணியே கடவுள் பணி' என்று கூறித் தொண்டாற்றினார். இராமகிருஷ்ண இயக்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.



சுவாமி விவேகானந்தர்

* கல்விப் பணி, உடல் நலம், கிராம வளர்ச்சி, ஆதிவாசிகள் முன்னேற்றம் மற்றும் இளைஞர் நலம் ஆகியவற்றிற்காகப் பாடுபட்டு வருகிறது.

* இவ்வியக்கம் மருத்துவ மனைகள், அறக்கட்டளை மருத்துவ மனைகள், மகப்பேறு மருத்துவமனைகள், ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் போன்றவற்றை நடத்தி மக்களுக்குத் தொண்டாற்றி வருகிறது.

* இந்தியா முழுவதும் புகழ் பெற்ற கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், தொழிற்கல்வி பயிற்சி மையங்களை நிறுவி, கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகிறது. இயற்கை சீற்றங்களான பஞ்சம், வெள்ளம், நிலநடுக்கம், புயல் மற்றும் கொடிய தொற்று நோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக பல நிவாரண முகாம்களை நடத்தி மிகச் சிறந்த முறையில் சேவையாற்றி வருகிறது.

* மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவனப்பகுதியில் சூரிய ஒளியைப்பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் (Photo Voltaic (P.V.) Lighting System) தோன்றுவதற்கு முக்கியப்பங்கு வகித்தது இராமகிருஷ்ண இயக்கம் ஆகும். இதன் விளைவாக, தொன்றுதொட்டு மண்ணெண்ணெய் பயன்படுத்தி வந்த மக்களுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்தும் நிலையை உருவாக்கியுள்ளது. ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் மற்றும் கலாச்சாரக் குழுவின் (U N E S C O) தலைமை இயக்குநர் பெடரிக்கோ மேயர் (Federico Mayor) 1993 ஆம் ஆண்டில் சொற்பொழிவாற்றும் பொழுது '1897 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இராமகிருஷ்ண இயக்கத்தின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள் 1945–ல் ஏற்படுத்தப்பட்ட 'யுனஸ்கோ'வின் அமைப்பைப்போன்றே இருப்பதால் தான்' மிகவும் ஈர்க்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## சமரச சுத்த சன்மார்க்க சங்கம் கி.பி. 1865

சமரச சுத்த சன்மார்க்கச் சங்கம், வள்ளலார் என அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் அவர்களால் நிறுவப்பட்டது. இவர் சிதம்பரத்திற்கு அருகில் உள்ள மருதூர் என்னும் கிராமத்தில் 1823 ஆம் ஆண்டு பிறந்தார். 19 ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய சமூக–சமய சீர்திருத்த இயக்கத்தில் முக்கிய பங்கு வகித்தார். இவர் ஆன்மீகத்தில் கொண்ட பற்று காரணமாக அவரது பாடல்களில் சமுதாய சீர்திருத்தங்கள் மற்றும் சமய உணர்வுகள் இரண்டறக் கலந்திருந்தன. ஆன்மீக விழிப்புணர்வு வாயிலாக சமூகத்தில் நிலவும் தீமைகளைக் களையமுடியும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

இராமலிங்க அடிகள், தமிழ் மக்களிடையே சமய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தினார். கடவுள் வழிகாட்டுதலால் மட்டுமே சாதி

வேறுபாடற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று எடுத்துரைத்ததோடு, 'இறைவன் ஜோதி வடிவானவன்' என்றும் 'அருட்பெரும் ஜோதியாக' இருக்கிறார் என்றும் குறிப்பிட்டார். அடிகளார் பிறப்பினால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்தார். சாதி–சமூக வேறுபாடுகள் அர்த்தமற்றவை என்று குறிப்பிட்டதோடு, அன்பு மற்றும் சகோதரத்துவம் நிலவ வேண்டும் என்றும் பாடுபட்டார்.



இராமலிங்க அடிகள்

பசி மற்றும் வறுமையே சமுதாயத்தின் அனைத்துத் தீமைகளுக்கும் காரணம் என வள்ளலார் நம்பினார். ஏழைக்கு உணவு அளிப்பதே சிறந்த வழிபாடு என உறுதியாக நம்பினார். எனவே ஏழைகளின் பசியைப் போக்குவதற்காகவே 'சத்திய தருமசாலையை' 1867 இல் வடலூரில் நிறுவினார். சத்திய தருமசாலையின் தொடக்க நாளன்று அடுப்பிற்கு தீமூட்டி, இந்தத் தீ எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கட்டும். அப்பொழுதுதான் ஏழைகளுக்கு எப்பொழுதும் உணவு அளிக்க முடியும் என உறுதியுடன் கூறினார். இவர் மேற்கொண்ட உறுதி மொழிக்கு ஏற்றவண்ணம் ஆண்டு முழுவதும் சாதி–சமய வேறுபாடின்றி அனைவருக்கும் இன்றும் உணவளித்து வருகிறது.

வள்ளலார் அன்பு வழியில் ஆன்மீகத்தை அடையலாம் என்ற உறுதியான எண்ணம் கொண்டிருந்தார். ஆகவே, மனிதர்களிடத்து மட்டுமன்றி தாவரங்கள், புழு, பூச்சிகள் மற்றும் விலங்குகள், பறவைகள் போன்ற அனைத்து உயிர்களிடத்தும் அன்பு செலுத்தினார். இதனையே 'ஜீவ காருண்யம்' (உயிர்களிடத்து அன்பு செலுத்துதல்) என்று அழைக்கிறோம். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' எனக் கூறிய அடிகளார், தான் உயிர்களிடத்து எவ்வாறு அன்பு கொண்டிருந்தார் என்பதை அறிகிறோம். மூடப்பழக்க வழக்கங்களையும், சமய சடங்குகளையும் எதிர்த்த வள்ளலார் உணவுக்காக விலங்குகள் கொல்லப்படுவதை வன்மையாகக் கண்டித்தார். சைவ உணவிற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

'மனித இனத்திற்கு செய்யும் தொண்டே மோட்சத்தை அடைவதற்கான வழி' என்பது வள்ளலாரின் போதனைகளில் மிக முக்கியமானதாகும். கடவுள், கருணை மற்றும் அறிவு வடிவமாகத் திகழ்கின்றார். ஆகவே கடவுளை அடையும் வழி உயிர்களிடத்து காட்டும் கருணையும், இரக்கமும் ஆகும் என்று குறிப்பிட்டார்.

தியானம் செய்வதே சிறந்த வழிபாடு எனக் கருதிய வள்ளலார், 1872 ஆம் ஆண்டு சத்திய ஞான சபையை நிறுவினார். இங்கு வழிபாட்டுக் கூட்டங்கள் மத வேறுபாடின்றி நடைபெறுவதை உறுதிப்படுத்தினார். இவரது பக்திப் பாடல்கள் தொகுக்கப்பட்டு, அத்தொகுப்பு திருவருட்பா என்றழைக்கப்படுகிறது.

## அலிகார் இயக்கம்

அலிகார் இயக்கம், சர் சையது அகமதுகான் என்ற ஆங்கில அரசாங்கத்தில் பணியாற்றிய நீதித்துறை அலுவலரால் தோற்றுவிக்கப்பட்டது. இது நவீனக் கல்வியையும், சமூகச் சீர்திருத்தங்களையும் முஸ்லீம்களிடையே பரப்ப அமைக்கப்பட்ட முதல் மற்றும் மிக முக்கியமான இயக்கம் ஆகும்.

1864 ஆம் ஆண்டு காசிப்பூர் என்னும் இடத்தில் சையது அகமதுகான் ஓர் பள்ளியை நிறுவினார். பின்னர் இது அறிவியல் கழகம் (Scientific Society)

என்று அழைக்கப்பட்டது. அக்கழகம் பல்வேறு அறிவியல் நூல்களை உருது மொழியில் மொழி பெயர்த்து வெளியிட்டது. 1875 ம் ஆண்டு அலிகாரில் இவரால் தோற்றுவிக்கப்பட்ட முகமதியன் ஆங்கிலோ ஓரியண்டல் (MAO) கல்லூரி இவரது சிறந்த சாதனையாகத் திகழ்கின்றது. இக்கல்லூரி நாளடைவில் இந்திய முஸ்லீம்களின் மிக முக்கியமான கல்வி நிறுவனமாக மாறியது.

இக்கல்லூரியே பிற்காலத்தில் அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகமாக வளர்ச்சி அடைந்தது. சர் சையது அகமதுகான் தொடங்கிய சீர்திருத்த இயக்கம், **அலிகார் இயக்கம்** என அழைக்கப்பட்டது. தன்னுடைய எழுத்தாற்றலால் முஸ்லீம் சமுதாயத்தில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார். பெண்கள் முகத்திரை (பர்தா) அணிவதை நீக்கவும், பெண் கல்வி வளரவும் பாடுபட்டார். முஸ்லீம்களிடையே தன்னுடைய சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்புவதற்காக தாசில்–உத்–அஃலக் என்னும் **தினசரி** பத்திரிக்கையை நடத்தினர். இந்துக்களும், முஸ்லீம்களும் இந்தியா என்கின்ற அழகிய பறவையின் இரு கண்கள் என்று கூறினார். முஸ்லீம்களின் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தன்னலமற்ற தலைவர் சர் சையது அகமதுகான் ஆவார்.

## பிற சீர்திருத்தவாதிகள்


### ஜோதிபாபூலே

இந்தியாவில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிறந்த சமூக சீர்திருத்தவாதிகளில் ஜோதிபாபூலே ஒருவராவர். சாதிக் கட்டுப்பாடுகளுக்கு எதிராகப் போரிட ஓர் இயக்கத்தை தோற்றுவித்தார். பிராமண மேலாதிக்கத்தை உறுதியாக எதிர்த்தார். விவசாயிகள் மற்றும் தாழ்த்தப்பட்டோர் உரிமைகளுக்காகவும் போராடினார். ஆதரவற்ற குழந்தைகளுக்காக ஆதரவற்றோர் இல்லத்தை நிறுவிய முதல் இந்து இவர்தான் என உறுதியாகக் கூறலாம்.

1873ஆம் ஆண்டு **'சத்திய சோதக் சமாஜ்'** (உண்மை தேடுவோர் சங்கம்) என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இதன் நோக்கம் பிராமணர்கள் பிடியில் இருந்து தாழ்த்தப்பட்டோரை விடுதலைபெறச் செய்வதாகும். தாழ்த்தப்பட்டோரின் நிலையை மேம்படுத்த தன்வீட்டின் அருகிலேயே குளம் அமைத்து தாழ்த்தப்பட்டோர் நீர் எடுத்து பயன்படுத்துமாறு செய்தார். அனைவரோடும் ஒன்றாக அமர்ந்து, சாதியை மறந்து உணவு உண்ணுதலை (சமபந்தி) விரும்பினார்.

### ஸ்ரீ நாராயண குரு

கேரளத்தில் தோன்றிய புகழ் பெற்ற சமூக சீர்திருத்தவாதி ஸ்ரீ நாராயண குரு ஆவார்.



ஸ்ரீ நாராயண குரு

தான் சார்ந்த ஈழவ மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி முன்னேற்றத்திற்காகவும், பிற ஒடுக்கப்பட்ட கேரள மக்கள் முன்னேற்றத்திற்காகவும் 1903ஆம் ஆண்டு ஸ்ரீ நாராயண குரு **தர்ம பரிபாலன யோகம்** என்ற இயக்கத்தைத் தொடங்கினார். இவர் விலங்குகளை

பலிகொடுத்தல், சாதி வேறுபாடு, தீண்டாமை போன்ற சமூகக் கொடுமைகளைக் கண்டித்தார்.

### ஸ்ரீ பாத சாது மகாராஜா

சாது மகாராஜா மூங்கிர் மாவட்டத்தில் உள்ள செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தார். இவர் வைணவராக மாறினார். இவருக்கு முன் இவரது குடும்பத்தினர் அனைவரும் சைவ சமயத்தை சார்ந்து சிவனை வழிபட்டனர். இவர் சைத்தனியரைக் கௌரவிக்கும் வகையில் பிரேம மந்திர் என்னும் கோயிலைக் கட்டினார். மனித சேவை செய்வதற்காகவே பல தொண்டு இல்லங்களை (ஆசிரமங்கள்) நிறுவினார்.

### டாக்டர் B.R.அம்பேத்கார்

டாக்டர் B.R.அம்பேத்கார் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் தலித் மக்களின் மீட்பாளராகக் கருதப்படுகின்றார். இவர் இந்திய அரசியல் சட்ட வரைவுக் குழுவின் தலைவராக விளங்கினார்.



டாக்டர் B.R.அம்பேத்கார்

இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராகப் பணியாற்றினார். இவரது சீரிய தொண்டினைப் பாராட்டி இவருக்கு 1990 ஆம் ஆண்டு இந்தியாவின் மிகப்பெரிய விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கப்பட்டது. அம்பேத்கார் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் நாள் மகவு (Mhow) (தற்போதைய மத்தியப்பிரதேசம்) என்னும் ஊரில் பிறந்தார். 1924 ஆம் ஆண்டு ஜுலை மாதம் சாதியிலிருந்து விலக்கப்பட்டோர் நலச் சங்கம் (Outcastes Welfare Association) என்ற பஹிஷ்கிரித் ஹிதகரிணி (Bahiskrit Hitakarini Sabha) சபாவை ஏற்படுத்தினார். தாழ்த்தப்பட்ட மக்களை மற்றவர்களுக்கு இணையாக சமுதாயத்திலும் அரசியலிலும் உயர்த்துவதே இச்சங்கத்தின் நோக்கம் ஆகும்.

தீண்டத்தகாத மக்களுக்கு மகத் என்ற இடத்தில் உள்ள பொதுக்குளத்தில் குடிநீர் எடுக்கும் உரிமையைப் பெற்றுக் கொடுக்க, 1927 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பம்பாய்க்கு அருகில் "மகத் பேரணியை" தலைமையேற்று நடத்தினார்.

### தந்தைப் பெரியார்

தென்னிந்தியாவில் தோன்றிய மாபெரும் சீர்திருத்தவாதிகளில் பெரியார் ஈ.வே.ராமசாமியும் ஒருவர் ஆவார். ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகவே, தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார். பெரியார் அறிவித்த சமூக சீர்திருத்தங்கள் 20 ஆம் நூற்றாண்டின் சமூக சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தது.

### சமூக–சமய சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகள்

சமூக–சமய சீர்திருத்த இயக்கங்கள், சமூகத்திலும், சமயத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின.

சமூகத்தில் பரவியிருந்த கொடுமைகளான உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணங்கள், தீண்டாமை போன்றவை ஒழிய பெரும் உதவியாக அமைந்தன.

பெண்கல்வி, விதவைகள் மறுமணம், கலப்புத் திருமணங்கள், சமபந்தி உணவு

முறை ஆகியவை பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மக்களிடையே சமுதாய எழுச்சி, தேசிய உணர்வு பெருகிட வழிவகுத்தன.

மக்கள் தங்களின் கலாச்சாரம் மற்றும் அதன் பெருமைகளை அறிந்து கொள்ளச் செய்தன. அனைத்திற்கும் மேலாக இவ்வியக்கங்கள் அறிவியல் மற்றும் நேர்மையான வழியில் மக்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் செய்தன.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. சீர்திருத்த இயக்கங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர்

அ) இராஜாராம் மோகன் ராய் ஆ) தயானந்த சரஸ்வதி

இ) கேசப் சந்திர சென் ஈ) தேவேந்திர நாத் தாகூர்

2. 1829–ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு சதி என்னும் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழிக்க உறுதுணையாக இருந்தவர்.

அ) திருமதி. அன்னிபெசன்ட் ஆ) சுவாமி விவேகானந்தர்

இ) இராஜாராம் மோகன் ராய் ஈ) லாலா ஹன்ஸ்ராஜ்

3. சுவாமி தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பட்டது

அ) பிரம்ம சமாஜம் ஆ) ஆரிய சமாஜம்

இ) பிரார்த்தன சமாஜம் ஈ) அலிகார் இயக்கம்

4. இராமகிருஷ்ண மடத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம்

அ) காஞ்சிபுரம் ஆ) பேலூர் இ) மேலூர் ஈ) ஹம்பி

5. வள்ளலார் பக்திப் பாடல்கள் அடங்கிய தொகுப்பு

அ) தேவாரம் ஆ) திருவாசகம்

இ) எட்டுத்தொகை ஈ) திருவருட்பா

6. சர்.சையது அகமதுகான் என்பவரால் தொடங்கப்பட்ட இயக்கம்

அ) அலிகார் இயக்கம் ஆ) பிரம்ம ஞான சபை

இ) சமரச சுத்த சன்மார்க்க சங்கம் ஈ) முஸ்லீம் லீக்

7. சர் சையது அகமதுகான் பள்ளியை நிறுவிய இடம்

அ) அலிப்பூர் ஆ) ஆலப்புழை

இ) காசிப்பூர் ஈ) கான்பூர்

8. கேரளாவைச் சேர்ந்த சிறந்த சமூக சீர்திருத்த வாதி

அ) ஸ்ரீ நாராயண குரு ஆ) குரு பிரசாத்

இ) குரு நானக் ஈ) குரு சாமி

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | நவீன இந்தியாவின் விடிவெள்ளி | சுவாமி தயானந்த சரஸ்வதி |
| 2. | இந்து சமயத்தின் மார்ட்டின்லூதர் | இராமகிருஷ்ண மடம் |
| 3. | நியூ இந்தியா | அன்னி பெசன்ட் |
| 4. | சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் | இராமலிங்க அடிகள் |
| 5. | வள்ளலார் | டாக்டர். தருமாம்பாள் |
| | | இராஜாராம் மோகன் ராய் |

## இ. சுருக்கமான விடையளி.

1. பிரார்த்தனா சமாஜம் குறிப்பு வரைக.
2. ஆரிய சமாஜத்தின் பணிகள் யாவை ?
3. பிரம்மஞான சபையின் கொள்கைகள் யாவை ?
4. வள்ளலாரின் போதனைகள் யாவை ?
5. சாதியிலிருந்து விலக்கப்பட்டோர் நலச் சங்கத்தின் குறிக்கோள் என்ன ?
6. 19 ஆம் நூற்றாண்டின் சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகளை குறிப்பிடுக.

## ஈ. பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடையளி.

1. பிரம்ம சமாஜம்

   அ) பிரம்ம சமாஜத்தினை நிறுவியவர் யார் ?

   ஆ) இராஜா ராம் மோகன் ராய் பயின்ற மொழிகள் யாவை ?

   இ) இராஜாராம் மோகன் ராய் எழுதிய புத்தகங்கள் யாவை ?

   ஈ) பிரம்ம சமாஜத்தின் நம்பிக்கை யாது ?

2. ஆரிய சமாஜம்

   அ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் இயற்பெயர் என்ன ?

   ஆ) சுவாமி தயானந்த சரஸ்வதியின் குரு யார் ?

   இ) சுவாமி தாயனந்த சரஸ்வதியின் கொள்கை என்ன ?

   ஈ) ஆரிய சமாஜம் எதனை ஆதரித்தது ?

3. பிரம்மஞான சபை

   அ) பிரம்மஞான சபையை நிறுவியவர் யார் ?

   ஆ) பிரம்மஞான சபை நிறுவப்பட்டது ஏன் ?

   இ) 1893 ஆம் ஆண்டு பிரம்மஞான சபையின் தலைவர் யார் ?

   ஈ) பிரம்ம ஞான சபையின் தலைமையகம் எங்குள்ளது ?

4. இராமகிருஷ்ண மடம்

அ) இராமகிருஷ்ண பரமஹம்சர் என்பவர் யார் ?

ஆ) இராமகிருஷ்ண மடத்தினை நிறுவியது யார் ?

இ) உலக சமய மாநாடு எங்கு, எப்பொழுது நடைபெற்றது ?

ஈ) உலக சமய மாநாட்டில் இந்து சமயத்தின் பிரதிநிதியாக கலந்து கொண்டவர் யார் ?

5. அலிகார் இயக்கம்

அ) முஸ்லீம்களின் முதல் சமய இயக்கத்தின் பெயர் என்ன ?

ஆ) சர் சையது அகமது கான் உறுதியாக நம்பியது என்ன ?

இ) சர் சையது அகமது கானின் சாதனை யாது ?

ஈ) சர் சையது அகமது கான் வெளியிட்ட செய்தி தாளின் பெயர் என்ன ?

6. டாக்டர்.பி.ஆர். அம்பேத்கார்

அ) தலித்துக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோர்களின் மீட்பாளர் யார் ?

ஆ) இந்தியாவின் முதல் சட்ட அமைச்சர் யார் ?

இ) இந்திய அரசாங்கத்தால் இவர் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டார் ?

ஈ) பம்பாய்க்கு அருகில் மகத் பேரணியை தலைமை எற்று நடத்தியது ஏன் ?

## உ. பத்திகளில் விடையளி.

1. பிரம்ம சமாஜத்தைப் பற்றி விரிவாக எழுதுக.
2. இராமகிருஷ்ண மடத்தின் செயல்பாடுகளை விவரி.
3. சமூக மற்றும் சமய சீர்திருத்த இயக்கங்களில் இராமலிங்க அடிகளார் முக்கிய பங்காற்றினார். விவரி.

# 11. இந்திய விடுதலை இயக்கம் – முதல் நிலை காந்திக்கு முந்தைய சகாப்தம் (கி.பி.1885 – கி.பி.1919)

1857 ஆம் ஆண்டு தோன்றிய பெரும்புரட்சியின் மூலம் உருவானது இந்திய தேசிய இயக்கம். இது மாபெரும் போராட்டமாக மாறி, இறுதியில் 1947 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு விடுதலையை பெற்றுத் தந்தது. இந்திய தேசிய இயக்கம் வளர்வதற்கு பல்வேறு சூழ்நிலைகள் அடிப்படையாகத் திகழ்ந்தன.

## I. இந்திய தேசிய இயக்கம் தோன்றுவதற்கான காரணங்கள்

### 1. ஆங்கில ஏகாதிபத்தியம்

இந்திய தேசியம் ஏற்பட ஆங்கில ஏகாதிபத்தியம் ஒரு முக்கியமான காரணமாகும். ஆங்கிலேயர்கள் இந்தியா முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்ததின் மூலம் ஒற்றுமையை நிலைநாட்டினர். இதனால் இந்தியா ஒரே நாடு என்ற எண்ணத்தை மக்களிடையே உருவாக்கினர். இது தேசிய இயக்கம் மலர வழிசெய்தது.

### 2. ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் விளைவாக இந்தியா மேலை நாடுகளுடன் தொடர்பு கொண்டது. படித்த இந்தியர்களின் மொழியாக ஆங்கிலம் அமைந்தது. அதனால், அவர்கள் மேலை நாட்டினரின் கருத்துக்கள் மற்றும் கலாச்சாரங்களை உணரத் தொடங்கினர். மேலும், இந்தியர்கள் ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் ஐக்கியமடைந்ததைக் கண்டு ஊக்கம் அடைந்தனர். எனவே தாங்களும் விடுதலைபெறவேண்டும் எனக்கருதி போராட எண்ணினர்.

### 3. நவீன தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து

நவீன தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வளர்ச்சியினால் மக்களின் கருத்துக்கள் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்றடையத் தொடங்கின. தேசத்தலைவர்களின் சந்திப்பு மற்றும் மக்களுடனான நெருக்கமான தொடர்பு இந்தியா முழுவதும் பரவி, தேசிய இயக்கம் தோன்ற வழி வகுத்தது.

### 4. இந்தியத் தலைவர்கள்

இந்தியாவில் தோன்றிய தலைவர்கள் அறிஞர்கள், கவிஞர்கள் மற்றும் சமூக–சமய சீர்திருத்தவாதிகள் இந்தியாவின் பெருமைகளை எடுத்துரைத்து மக்களிடையே நாட்டுப்பற்றைத் தூண்டினர். இராஜாராம் மோகன்ராய், போன்ற சீர்திருத்தவாதிகளும் நேரு, திலகர், காந்தி, பட்டேல், சுவாமி விவேகானந்தர் போன்ற தலைவர்களும் இந்தியர்களிடையே தன்னம்பிக்கை மற்றும் புத்துணர்வை ஏற்படுத்தினர். இந்தியா மற்றும் இந்தியரின் புகழினைப் புத்துயிர் பெறச் செய்தனர். இவை இந்தியாவில் தேசிய இயக்கம் தோன்றுவதற்கு அடித்தளமாக அமைந்தன.

### 5. அச்சகமும் செய்தித்தாள்களும்

தேசியம் தோன்றவும், வளரவும் அச்சகமும், இந்தியப் பத்திரிக்கைகளும் மிக முக்கியச் சக்திகளாக செயல்பட்டன. பல்வேறு வட்டார மொழிகளில் ஏராளமான செய்தித்தாள்கள் வெளியிடப்பட்டன. அவைகளில் பெரும்பாலானவை ஆங்கிலேயருக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டன. இந்தியன் மிரர் என்ற பத்திரிக்கையும், பம்பாய் சமாச்சர், அமிர்த பஜார் பத்திரிகா, இந்து, கேசரி, மராத்தா போன்ற பத்திரிக்கைகள் பொதுமக்களின் கருத்துக்களைப் பிரதிபலித்ததுடன், மக்களிடையே தேசிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தின. பக்கிம் சந்திர சட்டர்ஜி, இரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதியார் போன்ற எழுத்தாளர்களின் எழுத்துக்கள் இந்திய மக்களிடையே தேசிய உணர்வைப் பொங்கியெழச் செய்தன. 1878 இல் கொண்டுவரப்பட்ட தாய் மொழிப் பத்திரிக்கைத் தடைச் சட்டம்

பத்திரிக்கை சுதந்திரத்தைப் பறித்தது. இது ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பை வலுப்பெறச் செய்தது.

### 6. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சி

1857 ஆம் ஆண்டு தோன்றிய பெரும்புரட்சி அடக்கப்பட்டது. இதன் மூலம் இந்தியர்கள் ஆங்கிலேயர்களின் அட்டூழியங்களைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இக்கலகம் ஆங்கிலேயருக்கும், இந்தியருக்கும் இடையே தீராத வெறுப்புணர்வையும், பரஸ்பர சந்தேக உணர்வையும் ஏற்படுத்தியது. முழுமையாக ஒடுக்கப்படாத இக்கலகம், தேசியவாதம் மலர்வதற்குக் காரணமாக அமைந்து, முடிவில் இந்திய விடுதலைக்கு வழி வகுத்தது.

### 7. இனப்பாகுபாடு

ஆங்கிலேயர்கள் பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றினர். இதன்படி இன வேறுபாட்டுக் கொள்கையினை கடைபிடித்தனர். இதனால் ஆங்கிலேயர்கள் தங்களை உயர்வாகவும், இந்திய மக்களைத் தாழ்வாகவும், இழிவாகவும் கருதினர். அனைத்து உயர்பதவிகளும் ஆங்கிலேயருக்கே வழங்கப்பட்டன. இந்தியர்களுக்கு எந்த உயர் பதவியும் வழங்கப்படவில்லை.

இல்பர்ட் மசோதாவால் இந்தியர்களுக்கு எந்த பலனும் ஏற்படவில்லை. இதனால் ஆங்கிலேயர்களிடமிருந்து சரியான நீதியை எதிர்பார்க்க முடியாத நிலை ஏற்பட்டது. இது தேசியம் வளர்வதற்கு வழிவகுத்தது.

## II. இந்திய விடுதலை இயக்கம்

### முதல் – நிலை காந்திக்கு முந்தைய காலம் கி.பி.1885–கி.பி.1919

இந்தியர்களுக்கு பல்வேறு உயர் பதவிகள் அளிக்கும்பொருட்டு சாசனச்சட்டம் 1833 மற்றும் 1853 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டன. ஆனால், எந்த இந்தியருக்கும் உயர்பதவி வழங்கப்படவில்லை. ஆங்கில அரசு அடக்குமுறைக் கொள்கையினையும், இனப் பாகுபாடு கொள்கையினையும் தொடர்ந்து கடைபிடித்தது. இது இந்தியர்களுக்கு மேலும் வெறுப்பைத் தந்தன. இதற்கிடையில் இந்திய மக்களிடையே தேசிய உணர்வுதோன்றி, தங்களுக்கு நிறைய அதிகாரங்கள் வழங்க வேண்டுமென்று கோரினர். 1878–ல் கொண்டுவரப்பட்ட ஆயுதச் சட்டமும் மற்றும் பிராந்திய மொழித் தடைச் சட்டங்களும் இந்தியர்களின் தேசிய உணர்வுகளை மேலும் அதிகப்படுத்தின. 1883 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இல்பர்ட் மசோதா இந்தியர்களின் விருப்பத்தினை நிறைவு செய்யவில்லை.

### இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றம் 1885

ஆங்கில ஆட்சியில் நம்பிக்கை இழந்த இந்திய மக்கள் இந்திய தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை ஏற்படுத்தினர். 1885ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற ஆங்கில அதிகாரியான ஆலன் ஆக்டேவியன் ஹியூம் என்பவரின் ஆலோசனை பேரில் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது. காங்கிரசின் முதல் கூட்டம் பம்பாயில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு டபிள்யூ.சி.பானர்ஜி (W.C. Banerjee) தலைமை வகித்தார். இந்தியா முழுவதிலுமிருந்து 72 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, மதன்மோகன் மாளவியா, எம்.ஜி.ரானடே, கோபாலகிருஷ்ண கோகலே, பெரோஷாமேத்தா, ஜி. சுப்ரமணிய அய்யர் போன்ற தாராள எண்ணம் கொண்ட பல தலைவர்கள் இம்மாநாட்டில் பிரதிநிதிகளாக கலந்துகொண்டனர்.

### இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்கள்

1. சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்பட வேண்டும், அதிகப்படியான பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும்.

2. கல்வியைப் பரப்ப நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

3. பத்திரிக்கைச் சுதந்திரம் வழங்கப்படவேண்டும்.

4. இந்திய நிர்வாகப்பணித் தேர்வுகளை (ICS) இந்தியாவிலேயே நடத்த வேண்டும்.

5. இராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டும்.

6. வரிமுறையை எளிமையாக்க வேண்டும் மற்றும் அயல்நாட்டுப் பொருள்கள் மீதான இறக்குமதி வரியை அதிகரிக்க வேண்டும்.

7. இந்தியர்களை உயர்பதவிகளில் நியமிக்க வேண்டும்.

8. இலண்டனில் உள்ள இந்தியன் கவுன்சில் (சபை) கலைக்கப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளை கொண்டு இந்திய தேசியக் காங்கிரஸ் செயல்பட்டது.

## மிதவாதிகள்

ஆரம்பகாலத்தில் காங்கிரஸ் தலைவர்கள் படித்த, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். எனவே இவர்கள் மிதவாதிகள் என்றழைக்கப் பட்டனர். அவர்கள் ஆங்கிலேயரின் நேர்மையான அணுகுமுறையில் நம்பிக்கை கொண்டிருந்தனர். தங்கள் கோரிக்கைகளையும், வாதங்களையும் அமைதியான முறையில் கோரிக்கை மனுக்கள் மூலம் நிறைவேற்ற விரும்பினர்.



பாலகங்காதர திலகர்

காங்கிரசின் தலைவர்களாக சுரேந்திரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, பெரோஷா மேத்தா, கோபாலகிருஷ்ண கோகலே, எம்.ஜி.ரானடே போன்றோர் விளங்கினர். மிதவாதிகளின் கோரிக்கைகள் அரசியல் பிச்சை போல் உள்ளது எனக் காங்கிரசில் இருந்த இளைய தலைமுறையினர் வர்ணித்தனர். தொடக்க காலத்தில் ஆங்கில அரசு காங்கிரசுடன் நட்பு பாராட்டியது. ஆனால், காங்கிரஸ் அதிகபடியான சீர்திருத்தங்களைக் கோரியதால், ஆங்கில அரசின் போக்கில் மாறுதல் ஏற்பட்டு, காங்கிரசின் கோரிக்கைகளுக்கு அரசு எத்தகைய கவனத்தையும் செலுத்தவில்லை.

## தீவிரவாதிகள்

காங்கிரசில் ஒரு பிரிவினர் மிதவாதிகளின் அணுகுமுறையில் நம்பிக்கை இழந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் பாலகங்காதர திலகர் (பால்), லாலாலஜபதிராய்(லால்), பிபின் சந்திரபால்(பால்), அரவிந்த கோஷ் ஆகியோர் ஆவர். அவர்கள் இந்திய சுதந்திரத்திற்காகப் போராடுவதில் உறுதி கொண்டிருந்தனர். அவர்கள் சுதந்திரத்திற்காக அரசின் கருணையைச் சார்ந்திருக்கவில்லை. தீவிர போக்கை கடைபிடித்தனர். சுதந்திரம் பெறுவது தங்கள் உரிமை என்று நம்பினர். அவர்களது தீவிரக் கொள்கையினால் அவர்கள் தீவிரவாதிகள் என அழைக்கப்பட்டனர்.

லோகமான்ய திலகர், மராத்தியில் கேசரி என்ற பத்திரிக்கை மூலம் பிரிட்டிஷாரின் கொள்கைகளைச் சாடினார். ‘சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்’ என்று முழங்கினார். அவர் கணபதி மற்றும் சிவாஜி பண்டிகைகள் மூலம் தேசிய உணர்வைத் தூண்டினார். இவ்வாறு தீவிரவாதப் பிரிவினர், காங்கிரசின் நோக்கத்தை மாற்றுவது மட்டுமல்லாமல் அவற்றினை அடையும் முறைகளையும் மாற்ற விரும்பினர்.

## வங்கப்பிரிவினை கி.பி.1905

1905 ஆம் ஆண்டு கர்சன் பிரபு வங்கப் பிரிவினையை மேற்கொண்டார். ஆட்சியின் எளிமைக்கும், நிர்வாக வசதிக்கும் வங்காளத்தை, கிழக்கு வங்காளம் மற்றும் அசாமை இணைத்து ஒரு மாகாணமாகவும், மேற்கு வங்காளம் மற்றும் பீகாரை இணைத்து மற்றொரு மாகாணமாகவும் அறிவித்தார். நிர்வாக வசதிக்காக வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது என்ற கர்சனின் கூற்றை இந்தியர்கள் நம்பவில்லை. இச்செயல் இந்துக்களையும், முஸ்லீம்களையும் பிரிப்பதற்காக செய்யப்பட்ட சூழ்ச்சி என்று கருதினர். இதைத் தீவிரவாதிகளும், மிதவாதிகளும் பிரித்தாளும் கொள்கையின் அறிமுகம் என்று கருதினர். தீவிர வன்முறையினாலும், எதிர்ப்பினாலும் 1911 ஆம் ஆண்டு வங்காளம் மீண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டது. வங்கப்பிரிவினை பொருளாதாரப் புறக்கணிப்பு என்னும் சுதேசி இயக்கம் தோன்றுவதற்குக் காரணமாயிற்று.



கர்சன் பிரபு

சுதேசி என்பதன் பொருள் சொந்த நாடு என்பதாகும். இவ்வியக்கத்தின்படி நாட்டின் தொழில்கள் மேம்பாடு அடைவதை ஊக்குவித்து, அயல்நாட்டுப் பொருள்கள் பயன்பாட்டைப் புறக்கணிப்பதாகும். பக்கிம் சந்திர சட்டர்ஜி என்பவரால் இயற்றப்பட்ட ‘வந்தேமாதரம்’ என்னும் தாய்நாட்டு பற்றுமிக்க முழக்கத்தை காங்கிரசார் எழுப்பினர்.

## முஸ்லீம் லீக் தோற்றம் கி.பி. 1906

1857 ஆம் ஆண்டு தோன்றிய பெரும் புரட்சியில் முஸ்லீம்கள் ஈடுபட்டனர். ஆனால் இந்திய தேசிய காங்கிரசின் நடவடிக்கைகள் முஸ்லீம்களிடையே ஒருவித பயத்தை ஏற்படுத்தியது. தங்கள் முன்னேற்றத்திற்கு தனியாக ஒரு அமைப்பு தேவை என்பதை உணர்ந்தனர். பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றிய ஆங்கில அரசு, முஸ்லீம்களின் வேண்டுகோளை ஏற்றது. 1906 ஆம் ஆண்டு டாக்கா நகரைச் சேர்ந்த நவாப் சலிமுல்லாகான் என்பவரது தலைமையில் முஸ்லீம்லீக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. முஸ்லீம்களின் உரிமைகளைப் பாதுகாப்பது, அவர்களுக்கு மேலும் பல சலுகைகளைப் பெறுவது, காங்கிரஸிலிருந்து அவர்களை தனியாகப் பிரிப்பது, ஆங்கிலேயருக்கு விசுவாசமாக நடந்து, தனித்தொகுதி பெறுவது ஆகியவற்றை நோக்கங்களாக கொண்டிருந்தது.

## சூரத் பிளவு கி.பி.1907

காங்கிரஸில் மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் அதிகரித்துக் கொண்டே வந்தன. 1907ஆம் ஆண்டு நடந்த சூரத் மாநாட்டில் மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே காங்கிரஸ் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் மோதல் ஏற்பட்டது. இதனால் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்து தீவிரவாதிகள் வெளியேறினர். பாலகங்காதர திலகர் தீவிரவாதிகளின் தலைவராகவும், கோபாலகிருஷ்ண கோகலே மிதவாதிகளின் தலைவராகவும் திகழ்ந்தார்.

## மிண்டோ–மார்லிச் சீர்திருத்தச் சட்டம் கி.பி.1909

முஸ்லீம்களை திருப்திபடுத்த, 1909ஆம் ஆண்டு மிண்டோ–மார்லி சீர்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின்படி முஸ்லீம்களுக்கு தனித்தொகுதிகள் வழங்கப்பட்டன.

ஆனால் இதனை காங்கிரஸ் கடுமையாக எதிர்த்தது.

## முதல் உலகப்போர் கி.பி.1914 – 1918

கி.பி.1914 ஆம் ஆண்டு முதல் உலகப்போர் தோன்றியது. இப்போரில் பிரிட்டன், பிரான்ஸ், இரஷ்யா ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றாக சேர்ந்து செயல்பட்டன. ஆங்கிலேயரின் சார்பில் இந்தியர்கள் இப்போரில் தீவிரமாக பங்குபெற்றனர். இதன்மூலம் ஆங்கிலேயர்கள் தங்களுக்கு பொறுப்பாட்சி வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இந்தியர்களுக்கு ஏற்பட்டது.

## தன்னாட்சி இயக்கம் கி.பி.1916

பாலகங்காதர திலகர் 1916 ஆம் ஆண்டு தன்னாட்சி கழகத்தை பம்பாயில் தொடங்கினார். அயர்லாந்தைச் சேர்ந்த அன்னிபெசன்ட் அம்மையார் சென்னையில் தன்னாட்சி கழகத்தின் கிளையினைத் தொடங்கினார். இவ்விரு அமைப்புகளும் சேர்ந்து இந்தியர்கள் தன்னாட்சி அல்லது சுய ஆட்சி பெறுவதற்கு பிரச்சாரம் செய்தன. அன்னிபெசன்ட் அம்மையார் தம் பேச்சாலும், எழுத்தாலும் இந்திய மக்களிடையே மிகப்பெரிய அளவில் உற்சாகத்தைத் ஏற்படுத்தினார். இதனால் அன்னிபெசன்ட் அம்மையார் நடத்திய நியூ இந்தியா பத்திரிக்கையை ஆங்கில அரசு தடை செய்தது. மோதிலால் நேரு மற்றும் சி.ஆர்.தாஸ் தன்னாட்சி இயக்கத்திற்கு தங்கள் முழு ஆதரவை தந்தனர்.

## லக்னோ ஒப்பந்தம் கி.பி.1916

இந்திய தேசிய காங்கிரசின் ஆண்டு மாநாடு 1916ஆம் ஆண்டு லக்னோ நகரில் நடைபெற்றது. இம் மாநாட்டில் இரு முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

1. மிதவாதிகளும், தீவிரவாதிகளும் ஒன்றுபட்டனர்.

2. காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் சுய ஆட்சி பெறுவதில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்கிட ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டனர். அந்த மாநாட்டில்தான் ஜவஹர்லால் நேரு, காந்தியை முதன்முதலாகச் சந்தித்தார்.

## ஆகஸ்ட் அறிக்கை கி.பி.1917

1917 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆகஸ்ட் அறிக்கை இந்தியாவின் எதிர்கால அரசியல் சீர்திருத்தங்கள் பற்றியும் இந்தியாவில் படிப்படியாக தன்னாட்சி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் உறுதியளித்தது. இதனால் தன்னாட்சி இயக்கம் படிப்படியாக முடிவுக்கு வந்தது.


## மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டம் கி.பி.1919

முதல் உலகப்போரின்போது இந்தியர்கள் ஆங்கிலேயருக்கு முழு ஆதரவு கொடுத்தனர். இதனால் ஆங்கிலேயர்கள் போரில் வெற்றி பெற்றனர். இதற்கு கைமாறாக, 1919 ஆம் ஆண்டு ஆங்கிலப் பாராளுமன்றம், மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தின்படி மத்திய மற்றும் மாகாண சட்டமன்றங்கள் விரிவுபடுத்தப்பட்டன. மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இச்சட்டத்தின்படி ஆங்கிலோ–இந்தியர்கள், சீக்கியர்கள் மற்றும் கிறித்துவர்கள் ஆகியோர்களுக்கு தனித்தனி தொகுதிகள் வழங்கப்பட்டன. எனினும் இந்திய தேசிய காங்கிரஸ் இச்சட்டத்தை நிராகரித்தது. இச்சட்டத்தை வெளியிட்டது ஆங்கிலேயரின் பெருந்தன்மையற்ற செயல் எனவும் அதனை ஏற்றுக்கொள்வது இந்தியருக்கு மதிப்புடையதாகாது எனவும் அன்னிபெசன்ட் விவரித்தார்.

## ரௌலட் சட்டம் கி.பி.1919

ஆங்கில அரசு இந்திய சுதந்திரப் போராட்டத்தை தீவிரமாக எதிர்கொள்ள 1919 ஆம் ஆண்டு ரௌலட் சட்டத்தை கொண்டுவந்தது. இச்சட்டத்தின்படி, உத்தரவின்றி எவரையும் கைது செய்யவும் விசாரணையின்றி சிறையில் அடைக்கவும் ஆங்கில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இந்திய மக்கள்

# இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற மையங்கள்



காந்தியடிகளின் தலைமையில் ரௌலட் சட்டத்தை கடுமையாக எதிர்த்தனர். இதன் விளைவாக 1919 ஏப்ரல் 6 ஆம் நாள் நாடு முழுவதும் கடையடைப்பு மற்றும் மறியல் போராட்டங்கள் (Hartals) மேற்கொள்ளப்பட்டன.

## ஜாலியன் வாலாபாக் படுகொலை கி.பி.1919

1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் நாள் பஞ்சாபின் முக்கியத் தலைவர்களான டாக்டர் சத்தியபால் மற்றும் டாக்டர் சாய்ப்புதீன் கிச்லு ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதனை எதிர்த்து சுமார் பத்தாயிரம் மக்கள் அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலாபாக்கில் (பூங்கா) அமைதியாகக் கூடியிருந்தனர்.



ஜாலியன் வாலாபாக் – அமிர்தசரஸ்

அப்பூங்கா நாற்புறமும் உயர்ந்த சுவர்களால் சூழப்பட்டு ஒரு சிறிய நுழைவுவாயில் மட்டுமே கொண்டதாக இருந்தது. இராணுவத் தளபதியான ஜெனரல் டயர் தம் படை வீரர்களுடன் அங்கு சென்று வாயிலை அடைத்தபடி, எவ்வித முன்னறிவிப்பின்றி அப்பாவி மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டார். அக்கூட்டத்தில் பல பெண்களும், குழந்தைகளும் கூடியிருந்தனர். இச்சம்பவத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக் கணக்கானோர் படுகாயமுற்றனர். இக்கொடூர படுகொலை, இந்தியர்களை கடுந்துயரத்தில் ஆழ்த்தியது. இப்படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து இரவீந்திரநாத் தாகூர் தனது நைட்வுட் (Knighthood) பட்டத்தை துறந்தார்.

## கிலாபத் இயக்கம் கி.பி.1919

இந்திய முஸ்லீம்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக பல குறைபாடுகளை கொண்டிருந்தனர். முதல் உலகப்போரில் ஜெர்மனியும் அதன் நட்பு நாடான துருக்கியும் தோல்வியடைந்தன. துருக்கி பேரரசு துண்டாக்கப்பட்டு பிரிட்டனும், பிரான்சும் தங்களுக்குள் பங்குபோட்டுக்கொண்டன. உலக முஸ்லீம் மக்களின் சமயத் தலைவரான காலிப் அவமதிக்கப்பட்டார். இதனை முஸ்லீம்கள் பெருத்த அவமானமாகக் கருதினர். எனவே ஆங்கில அரசுக்கு எதிராக இந்தியாவில் முகமது அலி, சவுகத் அலி என்ற அலி சகோதரர்கள் கிலாபத் இயக்கத்தைத் தொடங்கினார்கள். முஸ்லீம் லீக் கட்சியும், காங்கிரஸ் கட்சியும் நெருங்கி வர நல்ல சந்தர்ப்பம் என எண்ணி காந்தி முழு மனதுடன் இவ்வியக்கத்தை ஆதரித்தார்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. பிரிட்டிஷார் ஒன்றுபட்ட நாட்டை உருவாக்க வழிகோலியது.

   அ) ஏகாதிபத்தியம் ஆ) அரசியல் இ) படையெடுப்பு ஈ) பேச்சு வார்த்தை

2. படித்த இந்தியர்களின் மொழியாக அமைந்தது

   அ) பிரெஞ்சு ஆ) ஆங்கிலம் இ) இந்தி ஈ) வங்காளம்

3. சமய மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளால் உருவானது.

அ) தேசியம் ஆ) புரட்சி இ) கலகம் ஈ) கிளர்ச்சி

4. மிதவாதிகளின் கோரிக்கைகளை தீவிரவாதிகள் வர்ணித்தது.

அ) அரசியல் பிச்சை ஆ) இரண்டாம் பட்சமானது

இ) கட்டளைகள் ஈ) திறந்த வெளிக்கொள்கை

5. காங்கிரசில் பிளவை ஏற்படுத்திய மாநாடு

அ) சூரத் ஆ) லாகூர் இ) திரிபுரா ஈ) மதராஸ்

6. மிண்டோ–மார்லி சீர்திருத்தச் சட்டம் தனித் தொகுதிகளை அறிமுகப்படுத்தியது

அ) இந்துக்கள் ஆ) முஸ்லீம்கள் இ) சீக்கியர்கள் ஈ) கிறித்துவர்கள்

7. பம்பாயில் தன்னாட்சி கழகத்தை தோற்றுவித்தவர்.

அ) நேரு ஆ) திருமதி.அன்னிபெசன்ட் இ) திலகர் ஈ) பாரதியார்

## ஆ. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. | ஈஸ்வர சந்திர வித்யா சாகர் | நாட்டுபற்றுமிக்க எழுத்தாளர் |
| 2. | சுப்பிரமணிய பாரதி | ஒருவருடைய சொந்த நாடு |
| 3. | சுதேசி | பாலகங்காதர திலகர் |
| 4. | நியூ இந்தியா | சமய மற்றும் சமூக சீர்திருத்தவாதி |
| 5. | கேசரி | அன்னிபெசன்ட் |
| | | யங் இந்தியா |
| | | பிபின் சந்திர பால் |

## இ. சுருக்கமாக விடையளி.

1. இந்திய பத்திரிக்கை மற்றும் இலக்கியம் இந்திய தேசிய இயக்கம் உருவாக எவ்வாறு வழி வகுத்தது ?
2. இந்திய தேசிய காங்கிரஸின் குறிக்கோள்கள் யாவை ?
3. சில முக்கிய மிதவாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. முஸ்லீம் லீக் தோற்றம் பற்றி சிறு குறிப்பு வரைக.
5. 1916– ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸின் லக்னோ மாநாட்டின் முக்கியத்துவத்தை கூறு.

## ஈ. கீழ்க்கண்ட தலைப்புகளிலுள்ள வினாக்களுக்கு விடையளி.

1. தேசிய இயக்கம் தோன்றுவதற்கான காரணங்கள்.

அ) தேசியத் தலைவர்கள் எவ்வாறு மக்களை கவர்ந்தனர் ?

ஆ) வட்டார மொழிப் பத்திரிக்கை சட்டம் எப்பொழுது கொண்டுவரப்பட்டது ?

இ) ஆங்கிலேயர்கள் பின்பற்றிய கொள்கை யாது ?

ஈ) ஆங்கிலேயர்கள் இந்தியரை எவ்வாறு கருதினர் ?

2. இந்திய தேசியக் காங்கிரஸ்

அ) இந்திய தேசிய காங்கிரஸ் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது ?

ஆ)இந்திய தேசிய காங்கிரஸ் யாருடைய ஆலோசனையால் தோற்றுவிக்கப்பட்டது ?

இ) காங்கிரசின் முதல் மாநாடு எங்கு நடைபெற்றது ? இதற்கு தலைமை தாங்கியவர் யார் ?

ஈ) காங்கிரசின் முதல் மாநாட்டில் கலந்து கொண்ட சில தலைவர்கள் பெயரைக் குறிப்பிடு.

3. தீவிரவாதிகள்

அ) சில தீவிரவாத தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

ஆ) திலகரின் அறிவிப்பு என்ன ?

இ) திலகர் புதுப்பித்த பண்டிகைகளை குறிப்பிடுக.

ஈ) தீவிரவாத தேசியவாதிகளின் விருப்பம் யாது ?

4. ஜாலியன் வாலாபாக் படுகொலை

அ) கைது செய்யப்பட்ட முக்கியமான தலைவர்கள் யார் ?

ஆ) மக்கள் எங்கு கூடினர் ?

இ) அமிர்தசரஸின் ஆங்கில இராணுவ தளபதி யார் ?

ஈ) இரவீந்திரநாத் தாகூர் செய்தது என்ன ?

## உ. விரிவான விடையளி.


1. தேசிய இயக்கம் தோன்றுவதற்கான ஐந்து காரணங்களைக் கூறுக.
2. வங்கப் பிரிவினை பற்றி விவரி.

## ஊ. காலக்கோடு

1. 1885ஆம் ஆண்டு முதல் 1919 ஆம் ஆண்டு வரையிலான நிகழ்வுகளைக் காலக்கோட்டில் வரையவும். (பக்கம் 94, 95)

# 12. இந்திய விடுதலை இயக்கம் – இரண்டாம் நிலை காந்திய சகாப்தம் (கி.பி. 1920–கி.பி 1947)

பாலகங்காதர திலகர் 1920 ஆம் ஆண்டு மறைந்ததைத் தொடர்ந்து காந்தியடிகள் காங்கிரசின் தலைவரானார். காந்தியடிகள் தலைமையில் இந்திய தேசிய இயக்கம் இயங்கியது. இது இந்திய மக்களிடையே புதிய வேகத்தையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. இந்திய அரசியலில் காந்தியடிகளின் வருகையால் மக்கள் புத்துணர்வும், பெருமையும் அடைந்தனர். தேசத்தந்தை என்று அழைக்கப்பட்ட காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்தில் சத்தியாகிரகம் என்ற புதிய யுக்தியைக் கையாண்டார். இது உண்மை மற்றும் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது.



மகாத்மா காந்தி

## ஒத்துழையாமை இயக்கம் கி.பி1920–கி.பி.1922

ரௌலட் சட்டத்தை எதிர்த்தும், ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்தும், மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத்தின் பயனின்மையை ஆங்கிலேயருக்கு உணர்த்தவும் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொள்வது என காந்தியடிகள் அறிவித்தார். இதன்படி காங்கிரஸ் கட்சி 1920 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியது. இவ்வியக்கம் மூன்று நிலைகளில் கடைபிடிக்கப்பட்டது. முதற்கட்டமாக ஆங்கில அரசிடமிருந்து பெற்ற பதவிகளையும், பட்டங்களையும், விருதுகளையும் துறந்தனர். இரண்டாவது கட்டமாக வேலைநிறுத்தம் உட்பட பெரும் போராட்டங்களை நடத்தினர். அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் சட்ட மன்ற நடவடிக்கைகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டன. முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மூன்றாவது முக்கிய மற்றும் கடைசிக் கட்டமாக வரிகொடா இயக்கம் தொடங்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு அகமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் அரசு தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் வரை மக்கள் அரசுக்கு வரிசெலுத்தக் கூடாது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒத்துழையாமை இயக்கம் முழுவீச்சில், கடையடைப்பு, வேலை நிறுத்தம் போன்ற முறைகளில் நாடுமுழுவதும் தீவிரமாக நடைபெற்றது. வன்முறைகள் தலைவிரித்தாடின.

## சௌரி சௌரா சம்பவம் கி.பி.1922

ஒத்துழையாமை இயக்கத்தின்போது காந்தியடிகள், எத்தகைய வன்முறையிலும் ஈடுபடவேண்டாம் என்று நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். எனினும் வன்முறைகள் பல இடங்களில் தொடர்ந்தன. 1922 ஆம் ஆண்டு பிப்ரவரி 5 ஆம் நாள் உத்திரப்பிரதேசத்தில் சௌரி சௌரா (கோரக்பூர்) என்னுமிடத்தில் ஆயிரம் விவசாயிகள் பங்கேற்ற பேரணி நடைபெற்றது. இப்பேரணியின்போது காவலர்கள் விவசாயிகளின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் கோபமடைந்த விவசாயிகள் துப்பாக்கிச் சூட்டிற்கு எதிராக காவல் நிலையத்தை தாக்கி தீயிட்டுக் கொளுத்தினர். இதில் 22 காவலர்கள் உயிரிழந்தனர். இதனைக் கண்டு வருத்தமடைந்த காந்தியடிகள்

ஒத்துழையாமை இயக்கத்தை உடனடியாக நிறுத்திக்கொண்டார். ஆனால் காந்தியடிகள் உடனடியாக கைது செய்யப்பட்டார். இதனால் தேசிய இயக்க நடவடிக்கைகள் சில ஆண்டுகள் நிறுத்தி வைக்கப்பட்டன. காந்தியடிகள் இந்து–முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு மற்றும் பெண்கள் முன்னேற்றம் போன்றவற்றிற்காகப் பாடுபட்டார்.

### சுயராஜ்ஜியக் கட்சி கி.பி.1923 – 1925

1923–ஆம் ஆண்டு தேசிய இயக்கத்தை வழி நடத்த தேசத் தலைவர்களான சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு ஒன்று சேர்ந்து சுயராஜ்ஜியக் கட்சியை தோற்றுவித்தனர். இக்கட்சி, காந்தியடிகள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சுதந்திர போராட்டத்தை தலைமையேற்று நடத்தியது. சட்டமன்றங்களை புறக்கணிப்பதைத் தவிர்த்து ஆங்கில அரசை சட்டமன்றங்களிலேயே எதிர்ப்பது என்றும் இதன் தலைவர்கள் விரும்பினர். இந்தியாவில் இந்தியர்களின் தன்னாட்சி ஏற்படுத்தவும் வட்டமேஜை மாநாடுகள் மூலம் தங்கள் கோரிக்கைகளை பரிசீலிக்க வேண்டுமாறும் தீர்மானங்களை நிறைவேற்றினர். இக்கட்சி நிறுவனர் சி.ஆர். தாஸ் மரணமடைந்ததால் 1925ஆம் ஆண்டு சுயராஜ்ஜியகட்சியும் கலைக்கப்பட்டது.

### சைமன் தூதுக்குழு கி.பி. 1927 – 1928

1919 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டம் எந்த அளவிற்கு பயன்பட்டுள்ளது என்பதனை ஆராயவும், இந்திய நிர்வாகத்தை மேம்படுத்த மேலும் பல ஆலோசனைகளை வழங்கவும், சர் ஜான் சைமன் தலைமையில் 7 பேர் கொண்ட ஒரு குழுவை 1927ஆம் ஆண்டு ஆங்கில அரசு நியமித்தது. இதற்கு சைமன் குழு என்று பெயர். இக்குழுவில் இடம் பெற்றிருந்தவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்கள். ஒரு இந்தியர்கூட இதில் இடம் பெறவில்லை. எனவே இக்குழு 1928ஆம் ஆண்டு இந்தியா வந்தபோது கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இக்குழுவிற்கு சென்ற இடமெல்லாம் கருப்புக்கொடி போராட்டமும், எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டன. சைமனே திரும்பிச்செல் என்று நாடு முழுவதும் குரலெழுப்பப்பட்டது. ஆங்கில அரசு எதிர்ப்பாளர்களை கடுமையாகத் தாக்கியது.




சைமன் தூதுக்குழு – எதிர்ப்பு

பஞ்சாப் சிங்கம் என்றழைக்கப்பட்ட லாலா லஜபதிராய், சைமன் குழுவிற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், காவலர்கள் நடத்திய தடியடியால் தாக்கப்பட்டு உயிர் துறந்தார். பகத்சிங் மற்றும் ஏராளமான கிளர்ச்சியாளர்கள் ஆங்கிலேயர்களை பழிதீர்க்கத் துடித்தனர்

### லாகூர் காங்கிரஸ் மாநாடு கி.பி. 1929

1929 ஆம் ஆண்டு காங்கிரஸ் மாநாடு லாகூரில் ஜவஹர்லால் நேரு தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பூரண சுதந்திரம் பெறுவதே இந்திய தேசிய காங்கிரசின் நோக்கம் என அறிவிக்கப்பட்டது. டிசம்பர் 31, 1929 ஆம் ஆண்டு நள்ளிரவில் 'வந்தே மாதரம்' என்ற பாடலுக்கிடையே ராவி நதிக்கரையில் இந்திய மூவர்ணக்கொடி ஏற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து, ஜனவரி 26, 1930 ஆம் ஆண்டு நாடு முழுவதும் விடுதலை நாளாக கொண்டாடப்பட்டது. இதே நாளில் 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. எனவே ஜனவரி 26 ஆம் நாள் இன்றும் குடியரசு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

## சட்ட மறுப்பு இயக்கம் (அ) உப்புச் சத்தியாகிரகம் கி.பி. 1930

முழு சுதந்திரம் பெறுவதை நோக்கமாகக் கொண்டு காந்தியடிகள் 1930–ம் ஆண்டு சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். பல லட்சக்கணக்கான மக்கள் பயன்படுத்திவரும் உப்பு மீது ஆங்கில அரசு வரி விதித்தது. இது ஏழை, எளிய மக்களைப் பெரிதும் பாதித்தது. எனவே இதனை எதிர்த்து காந்தியடிகள் மார்ச் 12, 1930–ம் ஆண்டு சட்டமறுப்பு போராட்டத்தை மேற்கொண்டார்.



தண்டி யாத்திரை

சரோஜினி நாயுடு உட்பட 78 தொண்டர்களுடன் காந்தியடிகள் அகமதாபாத்திலுள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து பாதயாத்திரை தொடங்கி, சுமார் 400 கி.மீ. பயணம் மேற்கொண்டு குஜராத் கடற்கரை பகுதியிலுள்ள தண்டி வந்தடைந்தார். இது தண்டி யாத்திரை அல்லது உப்புச் சத்தியாகிரகம் என்றழைக்கப்பட்டது. வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்கள் காந்தியடிகளுடன் சேர்ந்து பாதயாத்திரை மேற்கொண்டனர்.

தண்டியில் கடல் நீரிலிருந்து உப்பு காய்ச்சி ஏப்ரல் 6 ஆம் நாள் உப்புச் சட்டங்களை மீறினார். காந்தியடிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். தமிழ்நாட்டில் சி.ராஜகோபாலாச்சாரி தலைமையில் திருச்சியிலிருந்து தொண்டர்கள் பாதயாத்திரை மேற்கொண்டு தஞ்சாவூர் கடற்கரைப் பகுதியில் வேதாரண்யத்தில் உப்புச் சட்டங்களை மீறி, உப்பு காய்ச்சினர்.

## வட்டமேசை மாநாடுகள் கி.பி.1930– 1932
## முதல் வட்டமேசை மாநாடு கி.பி.1930

சட்ட மறுப்பு இயக்கத்தை ஆங்கில அரசால் கட்டுப்படுத்த முடியவில்லை. எனவே இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் முயற்சியில் ஆங்கில அரசு ஈடுபட்டது. இதனால் 1930–ம் ஆண்டு லண்டன் நகரில் முதல் வட்டமேசை மாநாட்டைக் கூட்டியது. சட்ட மறுப்பு இயக்கம் இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்ததால், காங்கிரஸ் கட்சி இம்மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை. இதனால் இம்மாநாடு தோல்வியில் முடிந்தது.

## காந்தி–இர்வின் ஒப்பந்தம் 1931

முதல் வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிந்ததால், எந்த முடிவும் எட்டப்படவில்லை. எனவே பிரிட்டிஷ் அரசு காந்திஜியை சந்திக்க இர்வின் பிரபுவை இந்தியாவிற்கு அனுப்பியது. இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன் முடிவில் 1931 ஆம் ஆண்டு காந்தி – இர்வின் ஒப்பந்தம் கையெழுத்தானது. இவ்வொப்பந்தத்தின்படி சட்டமறுப்பு இயக்கத்தை கைவிடுவது என்றும் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வது என்றும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. இதற்கு கைமாறாக, ஆங்கில அரசு போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் விடுதலை செய்வதென்றும், உப்புச் சட்டங்களை திரும்ப பெறுவது என்றும் ஒப்புக்கொண்டது.

## இரண்டாம் வட்டமேசை மாநாடு கி.பி. 1931

இரண்டாம் வட்டமேசை மாநாடு இலண்டனில் 1931–ல் நடைபெற்றது. காந்தி–இர்வின் ஒப்பந்தத்தின்படி, காந்தியடிகள் இம்மாநாட்டில் கலந்துகொண்டார். முழு சுதந்திரம், வகுப்பு பிரச்சினை போன்றவற்றிற்கு எந்த தீர்வும் இந்த மாநாட்டில் எட்டப்படவில்லை. எனவே காந்தியடிகள் பெருத்த ஏமாற்றத்துடன் நாடு திரும்பினார். காந்திஜி நாடு திரும்பியவுடன் கைது செய்யப்பட்டார்.



இரண்டாவது வட்டமேஜை மாநாடு

காங்கிரஸ் தடை செய்யப்பட்டது, இதனால் சட்ட மறுப்பு இயக்கம் இந்தியாவில் மீண்டும் தொடங்கப்பட்டது.

## வகுப்புவாத அறிக்கையும், பூனா ஒப்பந்தமும் கி.பி. 1932

இரண்டாவது வட்டமேஜை மாநாட்டின் இறுதியில் இங்கிலாந்து பிரதமர் இராம்சே– மெக்டொனால்டு வகுப்புவாத அறிக்கையை 1932 இல் வெளியிட்டார். இந்த அறிக்கையில் சிறுபான்மையினருக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் தனி இட ஒதுக்கீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அத்திட்டத்தை தாழ்த்தப்பட்ட இன மக்களின் தலைவரான டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார் வரவேற்றார். இதனை ஏற்க மறுத்து காந்தியடிகள் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். 1932 ஆம் ஆண்டு அம்பேத்காருடன் ஏற்பட்ட பூனா உடன்படிக்கைக்குப்பின் தனது உண்ணாவிரதத்தை கைவிட்டார். இவ்வுடன்படிக்கையின்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனித் தொகுதி ஒதுக்கீடு கைவிடப்பட்டது. சட்டசபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கு அதிக அளவு எண்ணிக்கையில் இடங்கள் வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. இதன் மூலம் இந்துக்களிடமிருந்து தாழ்த்தப் பட்டவர்களை தனியாக பிரிக்கும் ஆங்கிலேயரின் சூழ்ச்சி தோல்வி அடைந்தது.

## மூன்றாம் வட்டமேசை மாநாடு கி.பி. 1932

1932 ஆம் ஆண்டு மூன்றாவது வட்டமேசை மாநாடு லண்டனில் நடைபெற்றது. காங்கிரஸ் தலைவர்கள் இதில் பங்கு பெறவில்லை. எனவே இம்மாநாடு தோல்வியில் முடிந்தது.

## 1935 ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டம்

இந்திய அரசுச் சட்டம் 1935 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டம் சைமன் குழுவின் அறிக்கை மற்றும் மூன்று வட்டமேசை மாநாடுகளில் மேற்கொள்ளப் பட்ட முடிவுகளின் அடிப்படையில் இயற்றப் பட்டது. இச்சட்டம், பல்வேறுமாற்றங்களை அறிமுகப்படுத்தியது.

1. மாகாணங்களில் தன்னாட்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

2. மாகாணங்களில் செயல்பட்டு வந்த இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டது.

3. மத்தியில் கூட்டாட்சி அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது.

4. மாநிலங்களுக்கிடையே ஏற்படும் சிக்கல்களை தீர்த்து வைக்க கூட்டாட்சி நீதி மன்றம் நிறுவப்பட்டது,

5. கூட்டாட்சி ரிசர்வ் வங்கி நிறுவப் படுதல் ஆகியனவாகும்.

## இரண்டாம் உலகப்போர் கி.பி. 1939 – 1945

1935 ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தின் படி, 1937 ஆம் ஆண்டு மாநிலங்களில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி 9 மாநிலங்களில் வெற்றி பெற்று, மந்திரி சபை அமைத்தது. காங்கிரஸ் அமைச்சரவை பொதுமக்கள் நன்மைக்கென பல திட்டங்களைத் தீட்டி அவற்றை நிறைவேற்றுவதில் பெருமளவு வெற்றியும் கண்டது. ஆனால் இத்திட்டங்கள் எல்லாம் 1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் தொடங்கும் வரை அமைதியாகச் செயல்படுத்தப்பட்டன.

இந்நிலையில் ஆங்கில அரசு காங்கிரஸ் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் இந்தியாவை

இரண்டாவது உலகப்போரில் ஈடுபடுத்தியது. இந்தியாவை போரில் ஈடுபடுத்தியதைக் காங்கிரஸ் விரும்பவில்லை. எனவே, தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் 1939–ல் காங்கிரஸ் 9 மாநிலங்களில் அமைச்சரவைகளை ராஜினாமா செய்தன . காங்கிரஸ் கட்சி ராஜினாமா செய்ததை, முஸ்லீம் லீக் கட்சித் தலைவரான முகமது அலி ஜின்னா வரவேற்று, உற்சாகமாகக் கொண்டாடினார். அவர் அந்நாளை, 1939 டிசம்பர்,22 ஆம் நாளை விடுதலை நாளாகக் கொண்டாடினார். அதன் பின்னர், அவர் இந்துக்களும், முஸ்லீம்களும் ஒன்றாக இருக்கமுடியாது என்றும் அவர்களுக்கு தனித்தனியாக இரு நாடுகள் தேவை என்றும் கூறினார்.

## பாகிஸ்தான் கோரிக்கை கி.பி. 1940

முகமது அலி ஜின்னா 1940 ஆம் ஆண்டு லாகூரில் நடைபெற்ற முஸ்லீம் லீக் மாநாட்டில் தனது தனிநாடு கோரிக்கையை வெளியிட்டார். தனது இரு நாட்டு கொள்கையின் மூலம் இந்திய நாட்டை இந்துக்களுக்கு இந்தியா என்றும், முஸ்லீம்களுக்கு பாகிஸ்தான் என்றும் பிரிக்க வேண்டுமென்று வலியுறுத்தினார். முஸ்லீம்களின் தாய்நாடாக பாகிஸ்தான் விளங்க வேண்டும் எனவும், முஸ்லீம்கள் அதிகமாக வாழும் மாநிலங்கள் பாகிஸ்தானில் அடங்கும் எனவும் அறிவித்தார்.

## ஆகஸ்டு நன்கொடை கி.பி. 1940

ஆங்கில அரசப் பிரதிநிதி லின்லித்கோ இந்தியர்களை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தினார். இதனை காங்கிரஸ் எதிர்த்தது. காங்கிரசை திருப்தி செய்ய சில உறுதி மொழிகளை லின்லித்கோ வழங்கினார். இதன் மூலம் போர் முடிந்ததும், இந்தியாவிற்கு அரசியல் நிர்ணய சபை அமைக்க ஒரு குழு நியமிக்கப்படும் என்றும், அரசப் பிரதிநிதியின் போர் ஆலோசனைக் குழுவில் இந்தியருக்கு இடம் அளிக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. இது ஆகஸ்டு நன்கொடை என்று அழைக்கப்பட்டது. இதனை காங்கிரஸ் முற்றிலுமாக நிராகரித்தது.

## கிரிப்ஸ் தூதுக்குழு கி.பி.1942

இரண்டாவது உலகப்போரில் ஜப்பான் இங்கிலாந்திற்கு எதிராக ஈடுபட்டது. இங்கிலாந்து போரில் வெற்றி பெற, இந்தியாவின் ஆதரவு தேவைப்பட்டது. எனவே காங்கிரசின் ஒத்துழைப்பைப் பெறவும், இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், 1942 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சர்.ஸ்டாபோர்டு கிரிப்ஸ் தலைமையில் ஒரு தூதுக்குழுவை இந்தியாவிற்கு அனுப்பியது. இக்குழு கிரிப்ஸ் தூதுக்குழு என்று அழைக்கப்பட்டது. இக்குழு இரண்டாம் உலகப் போரில் ஆங்கிலேயருக்கு உதவிகரமாய் இந்தியா இருக்க வேண்டும் என அறிவித்தது. போருக்குப்பின், இந்தியர்களுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படும் எனவும், இந்திய அரசியல் அமைப்பினை வரைவதற்கு புதிய திட்டம் அறிவிக்கப்படும் எனவும் அறிவித்தது. ஆனால் இந்தியாவிற்கு முழு சுதந்திரம் வழங்குவது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே காந்தியடிகள் கிரிப்ஸ் தூதுக்குழு உறுதி மொழிகளை திவாலாகிக் கொண்டிருக்கும் வங்கியின் பின் தேதியிட்ட காசோலை எனக் குறிப்பிட்டார். கிரிப்ஸ் தூதுக்குழு தோல்வியடைந்தது.

## வெள்ளையனே வெளியேறு இயக்கம் கி.பி.1942

கிரிப்ஸ் தூதுக்குழுவின் தோல்வி, காந்தியடிகளின் போக்கில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. அதுவரை அவர் பின்பற்றி வந்த அகிம்சை வழிகள் எத்தகைய பலனையும் அளிக்கவில்லை என்பதை உணர்ந்தார். எனவே, அவர் ஆங்கிலேயர் இந்திய நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமெனக் கோரினார்.

இரண்டாம் உலகப்போரில் ஜப்பான் வெற்றி மேல் வெற்றிகளை குவித்துக்கொண்டே சென்றது. எனவே

ஆங்கிலேயர்கள் இனி இந்தியாவில் இருந்தால் ஜப்பான் இந்தியா மீது படையெடுக்கக் கூடும் என காங்கிரஸ் தலைவர்கள் உணர்ந்தனர். இதனால் 1942–ம் ஆண்டு ஆகஸ்டு 8–ம் நாள் காங்கிரஸின் செயற்குழு, ஆங்கிலேயர்கள் இந்தியாவை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது. மும்பையில் நடந்த செயற்குழு கூட்டத்தில், காந்தியடிகள் ஆற்றிய மறக்க முடியாத சொற்பொழிவைத் தொடர்ந்து அத்தீர்மானம் நிறைவேறியது. முழுச்சுதந்திரம் தவிர வேறு எதனாலும் நான் திருப்தி அடையமாட்டேன். நாம் அதற்காக வாழ்வோம் அல்லது வீழ்வோம். இந்தியாவை விடுதலை பெறச் செய்வோம் அல்லது அதற்காக செத்து மடிவோம் என்றார். உண்மையில் அவரது பேச்சு மிகப்பெரிய அளவிலான ஆயுதமற்ற புரட்சிக்கு எழுச்சி குரலாக அமைந்தது. அதற்கு அடுத்தநாளே காந்திஜி, நேருஜி, அபுல் கலாம் ஆசாத் மற்றும் முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். சரியான வழிகாட்டுதல் இல்லாமையால், நாடெங்கும் வன்முறைக் கலவரங்கள் வெடித்தன.

இரண்டாம் உலகப்போர் 1945 ஆம் ஆண்டு முடிவடைந்தது. போருக்குப் பின் இங்கிலாந்தில் தொழிற்கட்சி வெற்றி பெற்று கிளமண்ட் அட்லி தலைமையில் ஆட்சி அமைத்தது. தொழிற்கட்சியின் தலைவர் அட்லி இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தார். அவர் இங்கிலாந்தின் பிரதமரானார். அவர் காங்கிரசின் மீது ஆங்கில அரசு விதித்திருந்த தடை உத்தரவுகளையும் விலக்கினார். அட்லி இந்தியாவின் பிரச்சனைகளை தீர்க்க ஒரு குழுவை அமைத்தார். அக்குழு இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்க பரிந்துரைத்தது.

### சுபாஷ்சந்திரபோஸ்–இந்திய தேசிய ராணுவம் (ஐ.என்.ஏ.) 1942

நேதாஜி (தலைவர்) என அழைக்கப்படும் சுபாஷ் சந்திரபோஸ் புகழ்பெற்ற தேசத்தலைவர்களில் ஒருவராவார். அவர் 1927 ஆண்டு இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார். ஜவஹர்லால் நேருவுடன் இணைந்து பணியாற்றினார். நேதாஜி இளைஞர்களும், பொதுமக்களும் தேசிய உணர்வு பெறக் காரணமாய் திகழ்ந்தார். ஏராளமான இளைஞர்களை தேசிய இயக்கத்தில் பங்கு பெறச் செய்தார்.



சுபாஷ் சந்திரபோஸ்

1938 ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1939–ல் அவர் முற்போக்கு கட்சியை தொடங்கினார். பல நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, இந்தியா மீது அந்நாடுகளின் அனுதாபத்தைப் பெற்றார். அவர் சிறிது காலம் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார். அவர் ஆப்கானியர் போல மாறுவேடமிட்டு, இந்தியாவிலிருந்து தப்பி ஜெர்மனியை அடைந்து, ஹிட்லரைச் சந்தித்து உதவி கோரினார். பின்னர் 1942ஆம் ஆண்டு பர்மாவிற்கு சென்றார். ஜப்பானியர்களால் பர்மா ஆக்கிரமிக்கப்பட்டது. அச்சமயத்தில் பிரிட்டிஷாரின் பிடியிலிருந்த ஏராளமான

இந்தியக் கைதிகளை ஜப்பான் கைப்பற்றி பின்னர் 20,000 க்கும் மேற்பட்டவர்களை விடுதலை செய்தது. ஜப்பானிய அரசாங்கத்துடன் கூட்டுச்சேர்ந்து சுபாஷ் சந்திரபோஸ் இந்தியர்களுக்காக இந்திய தேசிய இராணுவத்தை அமைத்தார். 1943ல் சிங்கப்பூர் சென்றார். அங்கு இந்திய விடுதலைக் கழகத்தின் தலைமைப் பொறுப்பை இராஷ்பிகாரி போஸ், சுபாஷ்சந்திர போசிடம் ஒப்படைத்தார். ஆசாத் ஹிந்த் ஃபவுஜ் என்று அழைக்கப்பட்ட இந்திய தேசிய இராணுவத்தின் தளபதியாக சுபாஷ் சந்திரபோஸ் பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து சுபாஷ் சந்திரபோஸ் 'நேதாஜி' என்றழைக்கப்பட்டார். நேதாஜி என்றால் தலைவர் என்று பொருள். இந்திய தேசிய ராணுவத்தின் பெண்கள் பிரிவு தமிழ்நாட்டைச் சேர்ந்த லட்சுமி என்ற பெண்ணின் தலைமையில் ஜான்சி ராணி பெயரில் அமைக்கப்பட்டது. இந்திய தேசிய ராணுவம், ஆங்கிலேயருக்கு எதிராக இந்திய விடுதலைக்குக் கடுமையாக போராடியது.

ஜெய்ஹிந்த் என்ற சுபாஷ் சந்திரபோசின் முழக்கம் புகழ் பெற்ற முழக்கமாக மாறி, இந்தியா முழுக்க எதிரொலித்தது. 'டெல்லியை நோக்கிச் செல்' என்ற மற்றொரு புகழ்பெற்ற முழக்கமும் இவருடையதாகும். இரண்டாம் உலகப்போரில், 1945-ம் ஆண்டு ஜப்பான் சரணடைந்தது. இந்திய தேசிய இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டனர். நேதாஜி பாங்காங்க்கிலிருந்து டோக்கியோவிற்கு தப்பிச் சென்றார். அவ்வாறு செல்லும் வழியில் அவர் விமான விபத்தில் உயிர் இழந்ததாக நம்பப்படுகிறது.

### அமைச்சரவைத் தூதுக்குழு கி.பி.1946

1946 ஆம் ஆண்டு பெதிக் லாரன்ஸ், ஏ.வி. அலெக்சாண்டர் மற்றும் சர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் ஆகிய மூவர் அடங்கிய குழு இந்தியாவிற்கு வந்தது. அவர்கள் மூவருமே பிரிட்டிஷ் அமைச்சரவையில் உறுப்பினர்களாக இருந்தனர். எனவே, இக்குழு காபினெட் அல்லது அமைச்சரவை தூதுக்குழு என்றழைக்கப்பட்டது. இக்குழு இந்தியத் தலைவர்களிடம் ஆட்சி மாற்றம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியது. இக்குழு கூட்டாட்சி அரசு அமைய பரிந்துரை செய்தது. அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட வேண்டுமென்றும், அச்சட்டம் தயாராகும் வரை அனைத்துக்கட்சி பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால அரசு ஒன்று மத்தியில் அமைக்கவேண்டும் என்றும் பரிந்துரை செய்தது.

### இடைக்கால அரசாங்கம் கி.பி.1946

ஜவஹர்லால் நேருவைப் பிரதமராகக் கொண்ட இடைக்கால அரசு 1946-ல் நிறுவப்பட்டது.



ஜவஹர்லால் நேரு

இவ்வரசை ஏற்படுத்த நேரு ஜின்னாவின் உதவியை நாடினார். ஆனால் ஜின்னா மறுத்துவிட்டார். தனது பாகிஸ்தான் கோரிக்கையில் பிடிவாதமாக இருந்தார். எனவே, இந்தியப் பிரிவினை தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று.

### மவுண்ட்பேட்டன் திட்டம் கி.பி. 1947

1947-ஆம் ஆண்டு மவுண்ட்பேட்டன் ஆங்கில அரசுப் பிரதிநிதியாக பதவியேற்றார். இவரே ஆங்கில அரசின் கடைசி அரசப்பிரதிநிதி ஆவார்.

இவர் இந்திய அரசியல் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயற்சி மேற்கொண்டார். எனவே, 1947 ஜூன் 3இல்

மவுண்ட்பேட்டன் ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டார். அது மவுண்ட்பேட்டன் திட்டம் அல்லது ஜூன் 3 ஆம் நாள் திட்டம் என்றழைக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி இந்தியா, இந்திய யூனியன் என்றும், பாகிஸ்தான் யூனியன் என்றும் இருநாடுகளாகப் பிரிக்கப்படும்.



மவுண்ட்பேட்டன் பிரபு

இந்திய சுதேசி அரசுகள், இவ்விரு நாடுகளில் ஏதாவது ஒன்றுடன் சேர்ந்து கொள்ளவோ அல்லது சுதந்திரத்துடன் இருக்கவோ செய்யலாம் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் ஏற்றுக்கொண்டன.

## இந்திய விடுதலைச் சட்டம் கி.பி. 1947

மவுண்ட்பேட்டன் திட்டத்தின் அடிப்படையில், இங்கிலாந்து அரசு 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்திய விடுதலைச் சட்டத்தினை நிறைவேற்றியது. இச்சட்டத்தின்படி இந்தியப் பிரிவினை 1947 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்டது. ஆங்கில அரசிடமிருந்து அதிகாரங்கள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு மாற்றப்பட்டன. புதிய நாடான பாகிஸ்தானில், முஸ்லீம்கள் அதிகம் வாழும் பகுதிகளான மேற்கு பஞ்சாப், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம் மற்றும் கிழக்கு வங்காளம், அசாம் மாநிலத்திலுள்ள சில்ஹட் மாவட்டமும் இடம்பெற்றன. மீதமுள்ள பகுதிகள் இந்தியாவில் இடம் பெற்றன.

இந்தியா 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் விடுதலை பெற்றது. டெல்லியில் உள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற செங்கோட்டையில் ஆங்கிலக்கொடி (யூனியன்–ஜாக்) இறக்கப்பட்டு, இந்திய மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டது. மவுண்ட்பேட்டன் பிரபு சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராகவும், பண்டித ஜவஹர்லால் நேரு முதல் பிரதமராகவும் பொறுப்பேற்றனர். பின்னர் சி.இராசகோபாலாச்சாரி சுதந்திர இந்தியாவின் முதல் மற்றும் கடைசி இந்திய தலைமை ஆளுநராகப் பதவி ஏற்றார்.


தேசிய விடுதலைக்காக பாடுபட்ட நம் தேசத் தலைவர்களுக்கு நாம் மிகவும் நன்றிக்கடன்பட்டுள்ளோம். அதிலும் மகாத்மா காந்தியோடு ஒப்பிடுவதற்கு ஒருவரும் இல்லை. இந்தியா பிரிக்கப்பட்டபோது, இந்து–முஸ்லீம் இனக் கலவரங்கள் பல இடங்களில் தோன்றின. காந்தியடிகள் இந்த இனக் கலவரங்களைத் தடுத்து, இந்து முஸ்லீம்களுக்கிடையே சமாதானத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தினார். 1948 ஆம் ஆண்டு சனவரி 30 ஆம் நாள் காந்திஜி சுட்டுக்கொல்லப் பட்டார். இதனை ஜவஹர்லால் நேரு நம் வாழ்வில் ஒளி மறைந்து எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது என்றார்.

## சுதேசி சமஸ்தானங்களின் இணைப்பு

இந்திய அரசுகளை ஒன்றிணைத்தது சர்தார் வல்லபாய் பட்டேலின் மாபெரும் சாதனையாகும். இந்தியா சுதந்திரம் அடைந்தபோது நாட்டில் ஏறத்தாழ 565 சுதேசி அரசுகள் இருந்தன. அவற்றை நவாப்புகள், அரசர்கள் மற்றும் நிஜாம்கள் ஆட்சிசெய்து வந்தனர். இந்த அரசுகளை இந்தியாவுடன் இணைக்கும் பொறுப்பு சர்தார் வல்லபாய் பட்டேலிடம் ஒப்படைக்கப்பட்டது.

தொடக்கத்தில் சுதேசி அரசர்கள் பலர் தனித்துச் செயல்படவே விரும்பினர். பட்டேல் அவர்களை இந்திய யூனியனுடன் சேரும்படி அழைப்புவிடுத்தார். பலர் அவ்வழைப்பை உடனடியாக ஏற்றனர். ஏறத்தாழ 562 சுதேசி அரசுகள் இந்திய யூனியனுடன் இணைந்தன. ஆனால்

# இந்தியப் பிரிவினை கி.பி. 1947



காஷ்மீர், ஐதராபாத் மற்றும் ஜூனாகத் ஆகியவை இந்தியாவுடன் இணையத் துயங்கின.

நேரு பிரதமராக இருந்தபோது பட்டேல் தனது திறமையினாலும், கடுமையான நடவடிக்கைகளாலும், அந்தப் பகுதிகளை இந்திய யூனியனுடன் இணைத்தார். இதனால் 'இந்தியாவின் பிஸ்மார்க்' என்றும் இந்தியாவின் இரும்பு மனிதர் என்றும் போற்றப்பட்டார்.



சர்தார் வல்லபாய் பட்டேல்

## பிரெஞ்சுப் பகுதிகள் இணைக்கப்படுதல் கி.பி. 1954

பிரெஞ்சு அரசின் அனுமதியுடன் பாண்டிச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனாம் மற்றும் சந்திரநாகூர் ஆகிய பகுதிகள் 1954 ஆம் ஆண்டு இந்திய யூனியனுடன் இணைக்கப்பட்டன.

## போர்ச்சுக்கீசியர்கள் பகுதிகள் இணைப்பு கி.பி. 1961

கோவா, டையூ மற்றும் டாமன் ஆகிய பகுதிகள் போர்ச்சுக்கீசியரின் வசமிருந்த பகுதிகளாகும். அப்பகுதி மக்கள் இந்தியாவுடன் இணைய விரும்பினர். எனவே, இந்திய அரசு தனது இராணுவ நடவடிக்கைகளின் மூலம் 1961ஆம் ஆண்டு அப்பகுதிகளை இந்தியாவுடன் இணைத்தது. இவை இந்திய யூனியன் பகுதிகளாக மாறின.

## புதிய இந்தியா உருவாக்கம்

பல அரசியல் தலைவர்களும், அறிஞர்களும் ஒன்றுகூடி, அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கினர். இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு டாக்டர். இராஜேந்திர பிரசாத் தலைமை தாங்கினார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுத, சட்டவரைவுக் குழு டாக்டர் அம்பேத்காரை தலைவராக கொண்டு அமைக்கப்பட்டது. இக்குழு நவம்பர் 1949 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எழுதி வழங்கியது. இதன்படி 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் இந்தியா குடியரசு நாடாக அறிவிக்கப்பட்டது. அன்று முதல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. டாக்டர்.இராசேந்திர பிரசாத் சுதந்திர இந்தியாவில் முதல் குடியரசுத் தலைவரானார்.

## காலக்கோடு அட்டவணை

கி.பி.

1885 – இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம்

1890 –

1895 –

1900 –

1905 – வங்கப்பிரிவினை, சுதேசி இயக்கம்

கி.பி.

**1906 –** முஸ்லீம் லீக் தோற்றம்

**1907 –** சூரத் பிளவு

**1908 –**

**1909 –** மிண்டோ மார்லி சீர்திருத்ச் சட்டம்

**1910 –**

**1911 –** வங்கப் பிரிவினை நீக்கம்

**1912 –**

**1913 –**

**1914 –** முதல் உலகப்போர் தொடக்கம்

**1915 –**

**1916 –** தன்னாட்சி இயக்கம், லக்னோ உடன்படிக்கை

**1917 –** ஆகஸ்டு அறிக்கை

**1918 –** முதல் உலகப்போர் முடிவு

**1919–** மாண்டேகு–செம்ஸ்போர்டு சீர்திருத்தம், ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் படுகொலை

**1920 –** ஒத்துழையாமை இயக்கம்.

**1921 –**

**1922 –**சௌரி சௌரா சம்பவம், ஒத்துழையாமை இயக்கம் கைவிடல்

**1923 –** சுய ராஜ்ஜியக் கட்சி தோற்றம்

**1924 –**

**1925 –**

**1926 –**

**1927 –** சைமன் குழு அமைக்கப்பட்டது

கி.பி.

1928 – சைமன் குழு இந்தியா வருகை

1929 – லாகூர் காங்கிரஸ் மாநாடு

1930 – உப்புச் சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம், தண்டியாத்திரை, முதல் வட்டமேஜை மாநாடு

1931 – காந்தி–இர்வின் ஒப்பந்தம் , இரண்டாம் வட்டமேஜை மாநாடு

1932 –வகுப்புவாத அறிக்கை , பூனா ஒப்பந்தம், மூன்றாம் வட்டமேஜை மாநாடு

1933 –

1934 –

1935 – இந்திய அரசுச் சட்டம்

1936 –

1937 –

1938 –

1939 – இரண்டாம் உலகப்போர் தொடக்கம்

1940 – பாகிஸ்தான் தனிநாடு கோரிக்கை, ஆகஸ்டு நன்கொடை

1941 –

1942 –கிரிப்ஸ் தூதுக்குழு இந்தியாவருகை, வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1943 –

1944 –

1945 – இரண்டாம் உலகப் போர் முடிவு

1946 – காபினெட் தூதுக்குழு இந்தியாவருகை, இடைக்கால அரசு

1947 – மவுண்ட்பேட்டன் திட்டம், இந்தியவிடுதலைச் சட்டம், இந்தியா சுதந்திரம் பெறுதல்

1948 – காந்தியடிகளின் மறைவு

1949 –

1950–இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வருதல்–இந்தியா ஜனநாயக குடியரசாக மலர்தல்.

## பயிற்சி

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. சுதந்திர போராட்டத்தில் காந்திஜி உபயோகித்த புதிய யுக்தி முறை

   அ) சத்தியாகிரகம் ஆ) வெளிப்படைக் கொள்கை

   இ) நீண்ட பயணம் ஈ) வன்முறை

2. சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு தோற்றுவித்த கட்சி

   அ) கதர் ஆ) இந்திய தேசிய காங்கிரஸ்

   இ) சுயராஜ்ஜியம் ஈ) அகாலிதளம்

3. இந்திய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு

   அ) ஜனவரி 26,1950 ஆ) பிப்ரவரி 26,1950

   இ) ஆகஸ்ட் 26, 1950 ஈ) மார்ச் 26, 1950

4. 1932–ல் ஆங்கிலேய அரசு அறிமுகப்படுத்தியது

   அ) மதிய உணவு திட்டம் ஆ) திறந்த வெளி பல்கலைக்கழகம்

   இ) வயது வந்தோர் கல்வி ஈ) வகுப்புவாத அறிக்கை

5. இரண்டாம் உலகப்போரில் இந்தியர்களை ஈடுபடுத்தியவர்

   அ) கானிங் பிரபு ஆ) டல்ஹௌசி

   இ) லின்லித்கோ ஈ) லிட்டன் பிரபு

6. நேரு இடைக்கால அரசை அமைக்க உதவி கோரியது

   அ) அபுல் கலாம் ஆசாத் ஆ) ஜின்னா

   இ) சலிமுல்லாகான் ஈ) கான் அப்துல் காபர்கான்

7. இந்தியாவின் முதல் மற்றும் கடைசி இந்திய கவர்னர் ஜெனரல்

   அ) மவுண்ட் பேட்டன் பிரபு ஆ) நேரு

   இ) இராஜகோபாலாச்சாரி ஈ) காமராஜர்

8. இந்திய சமஸ்தானங்களை இணைக்கும் பணியை மேற்கொண்டவர்.

   அ) டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் ஆ) இராஜேந்திர பிரசாத்

   இ) இராஜாஜி ஈ) சர்தார் வல்லபாய் படேல்

9. இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர்

   அ) டாக்டர் இராஜேந்திர பிரசாத் ஆ) காந்திஜி

   இ) டாக்டர். இராதாகிருஷ்ணன் ஈ) சத்தியமூர்த்தி

**ஆ. பொருத்துக.**

I

| | | |
|---|---|---|
| 1. | சர்தார் வல்லபாய் படேல் | டச்சு பகுதிகள் |
| 2. | பாண்டிச்சேரி | வரைவுக் குழு |
| 3. | கோவா | சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் |
| 4. | டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் | இந்தியாவின் பிஸ்மார்க் |
| 5. | மவுண்ட்பேட்டன் பிரபு | போர்ச்சுக்கீசிய பகுதிகள் |
| | | பிரெஞ்சு பகுதிகள் |
| | | பிரிட்டிஷ் பகுதிகள் |

II

**ஆ. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | மோதிலால் நேரு | உத்திர பிரதேசம் |
| 2. | சௌரி சௌரா | சுயராஜ்ஜிய கட்சி |
| 3. | பஞ்சாப் சிங்கம் | கான் அப்துல் காபர்கான் |
| 4. | வகுப்புவாத அறிக்கை | லாலா லஜபதி ராய் |
| 5. | எல்லை காந்தி | ராம்சே மெக்டொனால்டு |
| | | பகத் சிங் |
| | | முஸ்லீம் லீக் |

**இ. சுருக்கமாக விடையளி.**

1. 1935 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் புகுத்திய மாற்றங்கள் யாவை ?
2. லாகூர் காங்கிரஸ் மாநாட்டின் முக்கியத்துவம் என்ன ?
3. 1929 ஆம் ஆண்டு லாகூர் காங்கிரஸ் மாநாட்டில் இயற்றப்பட்ட தீர்மானங்கள் யாவை ?
4. அமைச்சரவை தூதுக் குழு – குறிப்பு வரைக.
5. பாகிஸ்தானில் உள்ளடக்கிய மாநிலங்களின் பெயர்களை குறிப்பிடு.

**ஈ. பின்வரும் தலைப்புகளின் கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.**

1. சைமன் குழு

அ) சைமன் குழு ஏன் நியமிக்கப்பட்டது ?

ஆ) இந்தியர்கள் இக்குழுவை ஏன் நிராகரித்தனர் ?

இ) சைமன் குழு எப்படி வரவேற்கப்பட்டது ?

ஈ) சைமன் குழு எதிர்ப்புப் போராட்டத்தின் போது இறந்த இந்திய தலைவரின் பெயரைக் குறிப்பிடுக.

2. ஆகஸ்ட் நன்கொடை

அ) ஆகஸ்ட் நன்கொடை எப்பொழுது அறிவிக்கப்பட்டது ?

ஆ)இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தியாவிற்கு அளிக்கப்பட்ட உறுதிமொழி என்ன ?

இ) போர்க் குழு அமைக்கப்பட்டது ஏன் ?

ஈ) போர்க் குழுவில் யாருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது ?

3. மவுண்ட் பேட்டன் திட்டம்

அ) 1947–ஆம் ஆண்டு இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவி யேற்றவர் யார் ?

ஆ) ஆங்கிலேய கடைசி கவர்னர் ஜெனரல் யார் ?

இ) மவுண்ட்பேட்டன் திட்டம் என்றால் என்ன ?

ஈ) மவுண்ட் பேட்டன் திட்டத்திற்கு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் பிரதிபலிப்பு என்ன ?

**உ. பத்தி வினா.**

1. 1920–22 ஆம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தின் படிநிலைகளை விளக்குக ? ஒத்துழையாமை இயக்கம் கைவிடப்பட்டது ஏன் ?
2. உப்பு சத்தியாகிரகம் – குறிப்பு வரைக.
3. மூன்று வட்டமேஜை மாநாடுகளின் முக்கியத்துவத்தை விளக்கு.
4. வெள்ளையனே வெளியேறு இயக்கம் – குறிப்பு வரைக.
5. விடுதலைப் போரில் சுபாஷ் சந்திர போஸ் மற்றும் இந்திய தேசிய இராணுவத்தின் பங்கினை விவரி.

**ஊ. 1930 முதல் 1950 ஆம் ஆண்டு வரையிலான நிகழ்வுகளைக் காலக்கோட்டில் வரைக.**

**எ. இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களைக் குறிக்கவும். (பக்கம் 81 மற்றும் 93)**

1. அ) அமிர்தசரஸ் ஆ) லக்னோ இ) சௌரி சௌரா ஈ) பூனா உ) சூரத் ஊ) தண்டி எ) தூத்துக்குடி ஏ) வேதாரண்யம் ஐ) சென்னை ஒ) பம்பாய்

2. அ) போர்ச்சுகீசியப் பகுதிகள் – டையூ, டாமன், கோவா

ஆ) பிரெஞ்சுப் பகுதிகள் – பாண்டிச்சேரி, காரைக்கால், ஏனாம், மாஹி

இ) மேற்கு பாகிஸ்தான் ஈ) கிழக்கு பாகிஸ்தான் உ) ஹைதராபாத் ஊ) ஜுனாகத் எ) காஷ்மீர்

# 13. இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழ் நாட்டின் பங்கு

இந்திய விடுதலை போராட்ட இயக்கத்தில் தமிழ்நாடு மிக முக்கியப் பங்காற்றியது. புலித்தேவர், கட்டபொம்மன், மருது சகோதரர்கள், வேலுத்தம்பி போன்ற மாபெரும் தலைவர்கள் முக்கியப் பங்காற்றினர். இவர்கள் அனைவரும் தேசப்பற்று, தைரியம், சுயமரியாதை மற்றும் தியாகம் ஆகியவற்றிற்கு பெயர் பெற்றவர்கள். ஆங்கில ஆட்சியின் போது மாபெரும் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளான ஜி. சுப்பிரமணிய அய்யர், வ.உ.சிதம்பரம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதி, சி. இராசகோபாலாச்சாரி, பெரியார் ஈ.வெ.இராமசாமி, திருப்பூர் குமரன், கே.காமராஜ் மற்றும் பலர் சுதந்திரப்போராட்டத்தில் பெரும்பங்காற்றி இந்திய விடுதலைக்குப் பாடுபட்டனர்.

## வேலூர் கலகம் கி.பி. 1806

ஆங்கிலேயர்கள் இராணுவத்தில் புகுத்திய சில கட்டுப்பாடுகள் வேலூர் கலகத்திற்கு வழிவகுத்தது. இந்து வீரர்கள் தங்கள் நெற்றியில் சமயக் குறிகளை இடக்கூடாது என்றும், முஸ்லீம் வீரர்கள் தங்கள் தாடி மீசைகளை வெட்டி சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. இது ராணுவ வீரர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது. திப்புவின் பிள்ளைகள் இவர்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபடத் தூண்டினர்.

1806 ஜூலை 9 ஆம் நாள் வேலூர் கோட்டையில் திப்புவின் மகள் திருமணம் நடைபெற்றது. இத்திருமணத்தில் கலந்து கொள்ளுவதற்காக வீரர்கள் வேலூர் கோட்டையில் கூடினர். நள்ளிரவில் இங்கு கூடியிருந்த வீரர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டு, ஆங்கிலேயர்களைத் தாக்கி ஜூலை 10ஆம் நாள் கோட்டையைக் கைப்பற்றினர். திப்புவின் கொடி, வேலூர் கோட்டையில் ஏற்றப்பட்டது. திப்புவின் இரண்டாவது மகன் பதேக் ஹைதர் அரசராக அறிவிக்கப்பட்டார். இருப்பினும் இக்கிளர்ச்சி ஆங்கிலேயர்களால் அடக்கப்பட்டது.

## சென்னை மகாஜன சபை

சென்னை மாகாணத்தில் மக்கள் உரிமைகளை நிலைநாட்ட ஏற்படுத்தப்பட்ட முதல் அமைப்பு சென்னை சுதேசி சங்கம். இதனை 1852 ஆம் ஆண்டு ஹார்லி , இலஷ்மி நரசுச் செட்டி மற்றும் சீனிவாசப் பிள்ளை ஆகியோர் நிறுவினர். இச்சங்கம் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் கொள்கைகளை விமர்சனம் செய்தது. 1884 ஆம் ஆண்டு சென்னை சுதேசி சங்கம், சென்னை மகாஜனசபையுடன் இணைக்கப்பட்டது. எஸ்.இராமசாமி முதலியார், பி.அனந்தாசாருலு, மற்றும் பி. இரங்கய்யா நாயுடு ஆகியோர் இதனை ஏற்படுத்தினர். இச்சபை சென்னை அண்ணாசாலையில் அமைந்துள்ள இந்து பத்திரிக்கை அலுவலகத்தில் செயல்படத் துவங்கியது.

சென்னை மகாஜன சபையின் முதல் தலைவராக பி.இரங்கையா நாயுடு தேர்ந்தெடுக்கப்பட்டார். இச்சபை பல்வேறு நோக்கங்களைக் கொண்டு செயல்படத் துவங்கியது. இந்திய அரசப் பிரதிநிதி எல்ஜின் பிரபு, டிசம்பர் 1895 ஆம் ஆண்டு சென்னைக்கு பயணம் மேற்கொண்ட போது சென்னை மகாஜன சபை வழங்கிய வரவேற்புரையை ஏற்க மறுத்தார். சென்னை மகாஜன சபை சுதந்திரப்போராட்டத்தில் பெரும் பங்காற்றியது. இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் எழுப்பியது. 1920 ஆம் ஆண்டு முதல் இந்திய தேசிய காங்கிரசுடன் இணைந்து செயல்பட்டது. 1930 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 இல் உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தை சென்னையில் ஜார்ஜ்டவுன், யானைக்கவுனி, உயர்நீதிமன்றம் மற்றும் கடற்கரைப்பகுதியில் தலைமையேற்று நடத்தியது. அப்போராட்டத்தின்போது


உறுப்பினர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதனை விசாரிக்க மூன்று பேர் கொண்ட குழு நீதிபதி டி.ஆர்.இராமச்சந்திர அய்யர் தலைமையில் அமைக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு அரசிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

ஆங்கில அரசு காங்கிரஸ் கட்சிக்குத் தடை விதித்த போது, சென்னை மகாஜன சபை பல்வேறு பொருட்காட்சிகளை நடத்தி, குறிப்பாக அனைத்திந்திய காதி (கைத்தறி) கண்காட்சி மற்றும் சுதேசி பொருட்கள் கண்காட்சி மூலம் மக்கள் மனதில் தேசியப்பற்றை வளர்த்தது.

1896 அக்டோபர் 24 ஆம் நாள் தேசத்தந்தை மகாத்மா காந்தி சென்னை மகாஜன சபையில் உரையாற்றினார். இச்சபையின் பொன்விழா கொண்டாட்டத்தில் ஜவஹர்லால்நேரு கலந்துகொண்டார்.

### வ.உ. சிதம்பரம் பிள்ளை

செக்கிழுத்த செம்மல் என்றும், கப்பலோட்டிய தமிழன் என்றும் அழைக்கப்பட்ட சிதம்பரம்பிள்ளை செப்டம்பர் 5, 1872 ஆம் ஆண்டு ஒட்டப்பிடாரத்தில் பிறந்தார்.



வ.உ. சிதம்பரம் பிள்ளை

திருநெல்வேலியில் வழக்குரைஞராக தமது வாழ்க்கையைத் தொடங்கினார். வ.உ.சிதம்பரம்பிள்ளை, வியாபார சங்கம் மற்றும் தொழிலாளர்கள் அமைப்பினை ஊக்குவித்தார். சுதேசி தர்ம சங்க நெசவாளிகள் சங்கம் மற்றும் சுதேசி கூட்டுறவு அங்காடிகளை தூத்துக்குடியில் தோற்றுவித்தார். பின்னர், சுதேசி கப்பல் நிறுவனத்தை தோற்றுவித்து, தூத்துக்குடி–கொழும்பு இடையே கப்பல் போக்குவரத்தைத் துவங்கினார். 1905ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வங்காளப் பிரிவினை இவரை அரசியலில் ஈடுபடச் செய்தது. தூத்துக்குடி அருகில் பவள ஆலை வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டார். இதன் விளைவாக தொழிலாளர்கள் வேலை நேரம் குறைக்கப்பட்டு, ஊதியம் உயர்த்தப்பட்டது. 1907 ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். இம்மாநாட்டில் மிதவாதிகள், தீவிரவாதிகள் என காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது. வ.உ.சி. , பாலகங்காதர திலகரை ஆதரித்தார். தமிழகத்தில் காங்கிரசின் கொள்கைகளை தீவிரமாக பரப்பினார். இவர் மீது தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு, 40 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இவருடைய வலதுகால் சங்கிலியால் கோர்க்கப்பட்டு மாடுபோல் சிறையில் செக்கிழுத்தார்.

### சுப்பிரமணிய சிவா

சுப்பிரமணிய சிவா, திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தலக்குண்டு கிராமத்தில் பிறந்தார். இவர் ஒரு சிறந்த விடுதலைப்போராட்ட வீரராகவும், சிறந்த எழுத்தாளராகவும் விளங்கினார். ஆங்கிலேயருக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதால் 1908–1922 இடைப்பட்ட காலத்தில் பலமுறை கைது செய்யப்பட்டார். சிறையில் இருந்தபோது தொழு நோயால் பாதிக்கப்பபட்டார். இதனால் சேலம் சிறைக்கு மாற்றப்பட்டார். இவரால் நடக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதற்கிடையில் ஆங்கில அரசு இவருக்காகவே தொழு நோயாளிகள் இரயிலில் பயணம் செய்யக்கூடாது என்று சட்டம் ஒன்றை கொண்டுவந்தது. இதன் விளைவாக சுப்பிரமணிய சிவா உடல் முழுவதும் தொழுநோய் புண்களுடன் தமிழகம் முழுவதும் நீண்ட நடை

பயணமாகவே சுற்றிவந்தார். பின்னர் தனது நோயின் காரணமாக ஜூலை 23, 1925இல் காலமானார்.

## சுப்பிரமணிய பாரதியார்

சுப்பிரமணிய பாரதியார் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் டிசம்பர் 11, 1882 ஆம் ஆண்டு பிறந்தார். மதுரையில் 1904 ஆம் ஆண்டு தமிழாசிரியராக பணியாற்றினார்.



சுப்பிரமணிய பாரதியார்

சுதேசமித்ரன் பத்திரிக்கையின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். 1907 ஆம் ஆண்டு சூரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். பாலகங்காதர திலகர் மற்றும் அரவிந்தகோஷுடன் சேர்ந்து சுயராஜ்ஜியத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டார். 1907 ஆம் ஆண்டு தமிழ் வாரப் பத்திரிக்கையான 'இந்தியா' பத்திரிக்கையின் ஆசிரியரானார். அதே சமயத்தில் 'பாலபாரதம்' என்ற ஆங்கிலப் பத்திரிக்கையை வெளியிட்டார்.

1908 ஆம் ஆண்டு சென்னையில் மாபெரும் கூட்டத்தை நடத்தி, சுயராஜ்ஜிய நாளை கொண்டாடினார். அவரது பாடல்களான வந்தே மாதரம், அச்சமில்லை—அச்சமில்லை, எந்தையும் தாயும், ஜெயபாரதம் போன்றவை அச்சிடப்பட்டு தமிழ் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

1908 ஆம் ஆண்டு, வ.உ.சி க்கு எதிராக ஆங்கில அரசு தொடர்ந்த வழக்கில் வ.உ.சி க்கு ஆதரவாக சாட்சி வழங்கினார். இதனால் ஆங்கில அரசு இவரை கைது செய்ய ஆணை பிறப்பித்தது. எனவே பாரதியார் பிரஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டிலிருந்த புதுவைக்கு தப்பி ஓடினார். அங்கிருந்து தினசரி, வார இதழ் மற்றும் மாத இதழ்களில் தனது படைப்பினைத் தொடர்ந்து வெளியிட்டார். ஆனால் ஆங்கில அரசு 1909 ஆம் ஆண்டு பாரதியின் படைப்புகளுக்கு தடை விதித்தது.

முதல் உலகப்போருக்குப் பிறகு நவம்பர் 1918ஆம் ஆண்டு, பாரதியார் கடலூருக்கு வந்த சமயத்தில் கைது செய்யப்பட்டார். ஆனால் மூன்று வார காவலுக்குப் பிறகு விடுவிக்கப்பட்டார். பல்வேறு இன்னல்கள் மற்றும் வறுமையை அனுபவித்த பிறகு பாரதி சென்னையிலிருந்து சுதேசமித்ரன் பத்திரிகையின் ஆசிரியராக மீண்டும் பணியாற்றினார். செப்டம்பர் 11, 1921 ஆம் ஆண்டு காலமானார். ஏறத்தாழ 90 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்றும் பாரதியார் நம்மிடையே தமிழ் தேசியம் மற்றும் இந்திய ஒற்றுமையின் ஒரு சின்னமாக வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

## வாஞ்சிநாதன்

வாஞ்சிநாதன் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பணியாற்றினார். காங்கிரசின் தீவிர செயல்பாடுகள் பிரிட்டிஷ் அரசாங்கத்தை அச்சுறுத்தியது. எனவே திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளராக இருந்த ஆஷ் என்பவர் நான்கு பேரை திருநெல்வேலியில் சுட்டுக்கொன்றார். இக்கொடுஞ்செயலுக்குப் பழிதீர்க்க எண்ணிய வாஞ்சிநாதன், இரகசியமாக மணியாச்சி புகைவண்டி நிலையத்திற்குச் சென்று 1911, ஜூன் 17 ஆம் நாள் மாவட்ட ஆட்சியர் ஆஷ் அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டு, தாமும் தற்கொலை செய்து கொண்டார். வாஞ்சிநாதன் இறந்தபின் அவர் சட்டைப்பையில் ஒரு

கடிதம் இருந்தது. அக்கடிதத்தில், ஆட்சியர் ஆஷின் கொலை சென்னை வரும் அரசர் ஐந்தாம் ஜார்ஜை கொலை செய்வதற்கான ஒத்திகையே ஆகும் என்று எழுதப்பட்டிருந்தது

## திருப்பூர் குமரன்

ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலையில், திருப்பூர் குமரன் 1904ஆம் ஆண்டு பிறந்தார். இவர் மாபெரும் கிளர்ச்சியாளர்.



திருப்பூர் குமரன்

இவர் தேசியக்கொடித் தடைக்கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டு காவல் துறையினரின் தாக்குதலால் உயிர் துறந்தார். சாகும் தருவாயில் தேசியக்கொடியைக் கையில் ஏந்தியபடி தனது தேசப்பற்றை வெளிப்படுத்தினார். இவர் தமிழக வரலாற்றில் கொடிகாத்த குமரன் என்று போற்றப்படுகிறார். தமிழக அரசு திருப்பூர் இரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள பூங்காவில் இவரது சிலையை நிறுவியுள்ளது.

## எஸ். சத்தியமூர்த்தி

காமராசரின் அரசியல் குருவான சத்தியமூர்த்தி ஒரு சிறந்த அரசியல்வாதி மற்றும் நாட்டுப் பற்றாளர். 1930ஆம் ஆண்டு இராஜகோபாலாச்சாரியார் தனக்குப்பின் சத்திய மூர்த்தியை அகில இந்தியக் காங்கிரஸ் தமிழ்நாட்டுப் பிரிவின் தலைவர் ஆக்கினார். 1939 ஆம் ஆண்டு சென்னை மேயராக இருந்த போது பொதுக் கல்வி, தரமான குடிநீர் வழங்கல் மற்றும் வளமான வாழ்வு போன்றவைகளை மக்களுக்கு வழங்க பாடுபட்டார்.



எஸ்.சத்தியமூர்த்தி

சத்தியமூர்த்தி 1887 ஆம் ஆண்டு ஆகஸ்டு 19ஆம் நாள் சென்னை மாகாணத்திலுள்ள திருமயம் என்னும் ஊரில் பிறந்தார். தேசியப் போராட்டத்தில் பங்கேற்பதற்கு முன் வழக்கறிஞராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். சிறு வயதிலேயே அரசியலில் ஈடுபட்டு இந்திய தேசியக் காங்கிரசின் முக்கியத் தலைவர்களில் ஒருவராக உயர்ந்தார். 1919 ஆம் ஆண்டு மாண்டேகு – செம்ஸ்போர்டு சீர்திருத்தம் மற்றும் ரௌலட் சட்டத்தை எதிர்ப்பதற்காக அமைக்கப்பட்டிருந்த கூட்டுக் குழுவில் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

1939 ஆம் ஆண்டு சென்னை மேயராக இருந்த போது, சென்னையில் மிக மோசமான குடிநீர் பஞ்சம் நிலவியது. மக்களின் குடிநீர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக சென்னைக்கு மேற்கே 50கி.மீ தூரத்திலுள்ள பூண்டி என்னுமிடத்தில் ஒரு குடிநீர்த் தேக்கம் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். இக்குடிநீர்த் தேக்கம் பின்னர் காமராசர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. சத்தியமூர்த்தியை நினைவு கூறும்